பக்கங்கள்: பத்து

Registered as a newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2029 தை 5 ஞாயிற்றுக்கிழமை (18-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 47

## சுரேஷ் மாணிக்கவாசகத்தை கனடா நாளை நாடு கடத்துகிறது!

### கை, கால் விலங்கிடப்பட்டு நிர்வாணமான நிலையில் சிறையில்

ரொறன்டோ, ஜன. 18

இலங்கையரான சுரேஷ் மாணிக்கவாசகத்தை கனேடிய அரசு நாளை இலங்கைக்கு நாடு கடத்துகிறது. இவர் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக கனேடிய உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நிராகரிக்கப் பட்டுவிட்டது.

உலக தமிழர் அமைப்பின் பொறுப்பாளரான சுரேஷ் மாணிக்கவாசகத்தை இலங்கைக்கு நாடு கடத்தக்கூடாது என்று கோரி அவர் சிறை வைக்கப்பட்டிருந்த டொன் சிறைச்சாலைக்கு வெளியே கனடா வாழ் தமிழ்மக்கள் 72 மணி நேர தொடர் உண்ணாவிரதம் இருந்தது தெரிந்ததே.

உண்ணாவிரத நடவடிக்கை நீதிமன்ற நடவடிக்கை எல்லாம் தோல்வி அடைந்த நிலையிலேயே அவர் நாளை நாடு கடத்தப்பட இருக்கிறார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கலாம்

கொழும்பு, ஜன. 18

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை அடுத்த சில தினங்களில் மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் வன்னி சென்று வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் துருப்புக்களைச் சந்தித்தார்.

இவருடன் முப்படைத் தளபதிகளும் மற்றும் இராணுவ உயரதிகாரிகளும் சென்றிருந்தனர்.

(இ-9)

# களுத்துறை தமிழ் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதப் பயமுறுத்தல்!

முச்சந்திமுரளி



உள்நாட்டில் தான் இப்படி என்டால் வெளிநாட்டிலும் இதே கதி தான் போல......!

### புதிய நடைமுறையை எதிர்த்து ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜனவரி 18

கைதிகளைச் சந்திப்பதில் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட இருப்பதை ஆட்சேபித்து களுத்துறை சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி உள்ளனர். புதிய நடை முறை அமுலுக்கு வருமானால் அது அமுலுக்கு வரும் தினமான நாளை 19 ஆம் திகதி தொடக்கம் உறவினருடனான சந்திப்பை தாம் பகிஷ்கரிக்கப்போவதாகவும் 30 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் தமிழ்க் கைதிகள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

சிறைக் கைதிகளைச் சந்திப்பதில் பெற்றோர்கள், உறவினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை குறித்து அவசர காலச் சட்டம் ஒன்றை நாளை 19 ஆம் திகதி முதல் இலங்கை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் படி கைதிகளைப் பார்வையிட விரும்புவோர் தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரிவின் பொலீஸ் உத்தியோகத்தரிடமிருந்து வதிவிட உண்மையை நிரூபிக்கும் வகையிலும் —

சிறையில் உள்ளவரின் உறவுமுறை குறித்தும் ஒரு கடிதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு கடிதம் பெற்றுக் கொண்டவர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே கைதிகளைப் பார்வையிட முடியும்.

சிறைச்சாலைக்குள் உட்புகும் போதும், வெளியே வரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாற்று யோசனைகள் குறித்து ஐ.தே.க. புதனன்று ஆராயும்!

### சொக்ஸி நாடு திரும்பிய பின்பே இறுதி முடிவு

கொழும்பு, ஜன. 18

ஐக்கிய தேசியக்கட்சி எதிர் வரும் புதன்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் கூடி, மாற்று யோசனைகள் குறித்து விரிவாக ஆராய உள்ளது.

எனினும் முன்னாள் அரசமைப்பு அமைச்சர் கே. என். சொக்ஸியின் பரிசீலனையின் பின்னரே ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று யோசனை இறுதி வடிவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ள கே என். சொக்ஸி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தன் கேணியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 18

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சித்தன் கேணிப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இம் மோதலில் கொல்லப் பட்டதாக கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலத்தை சுன்னாகம் பொலீஸார் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் காணப்படும் இச் சடலம் அடையாளம் காணப்படாத வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### வாழைச்சேனைக்கு வடக்கே

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் படையினர் நேற்றுத் தேடுதல்

### பெருமளவு மரங்களை டிராக்டரில் ஏற்றிச் சென்றனர்

வாழைச்சேனைக்கு சுமார் 2 கிலோ மீற்றர் வடக்கே உள்ள இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசங்களான நாவலந்திவு, இறால் ஒடை, படுவான் ஆகியகிராமங்களை நேற்றுக் காலை 6.00 மணியில் இருந்து படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

வாழைச்சேனை காகித ஆலை முகாம், அதற்கு அண்மையில் உள்ள நாவலடி முகாம் ஆகியவற்றைச் சேர்ந்த படையினர் இணைந்து இந்தச் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

படையினர் தமது சுற்றி வளைப்பின் போது எவரை யாவது கைது செய்ததாகத் தகவல் இல்லை.

எனினும் வாழைச்சேனை வாவிக்கரையிலும் வாவிக் கரைக்கு அண்மையில் உள்ள தீவுக்குள்ளும் இருந்து பெரும் தொகையான மரங்களை அவர்கள் கைப்பற்றி டிராக்டர்களில் ஏற்றிச் சென்றனர்.

(இ)

## வானொலி - தொலைக்காட்சியில் நாளை முதல் தேர்தல் பிரசாரம்

### தேர்தல் ஆணையாளர் ஏற்பாடு

யாழ். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வானொலி, தொலைக்காட்சியில் தேர்தல் பிரசார உரைகளை நிகழ்த்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு கட்சிக்கும் சுமார் ஒரு மணித்தியாலம் வரை வானொலி, தொலைக் காட்சியில் தேர்தல் பிரசார உரை நிகழ்த்த நேரம் ஒதுக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தடவையும் 15 நிமிடங்கள் தமது பிரசாரத்தைச் செய்யலாம்.

தேர்தல் ஆணையாளருக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே வானொலி, தொலைக்காட்சி உரைகளுக்கான ஏற்பாட்டைத் தேர்தல் ஆணையாளர் பெற்றுக் கொடுத்தார்.

(இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தின் ஸ்தாபகர்களான

## அமலமரித் தியாகிகளின்

150 ஆவது வருட பொன்விழாவின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்,

(52706)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

சாவகச்சேரி, கெருடாவிலைச் சேர்ந்த அமரர் க. தம்பிப்பிள்ளையின் அருமை மனைவி சரஸ்வதிப் பிள்ளை 17-1-98 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் திருமதி மகேஸ்வரி சிவஞானம், திருமதி வரதலட்சுமி சந்திரதாஸ் (கனடா), திருமதி யோகலட்சுமி நாகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ந. சிவஞானம், காலஞ்சென்ற க. சந்திரதாஸ், அ. நாகேந்திரன், திருமதி சாவித்திரி பாலசிங்கம், ஆ. உதயசங்கர் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மு. கணேசலிங்கம், மு. பாலசிங்கம், திருமதி மீனா சிறீகாந்தா ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் மற்றும் சி. சிவாஜி, திருமதி சியாமளா கந்தசாமி, திருமதி கௌசலா தவக்குமாரன் (கனடா), திருமதி மஞ்சுளா பிரபாகரன் (கனடா), ச. ஜனகன் (கனடா), திருமதி சந்திரிக்கா இராசலிங்கம் (கனடா), திருமதி இந்திரகௌரி (கனடா), மகேந்திரன் (கனடா), திருமதி நித்தியகௌரி கௌரீஸ்வரன் (நோர்வே), செல்விகள் ந. விஜயகௌரி, ந. சாந்தகௌரி, செல்வன் ந. கௌரிசங்கர், திருமதி கோமளேஸ்வரி சந்திரசேகர, திருமதி யோகேஸ்வரி சண்முகநாதன், திருமதி இராசேஸ்வரி பத்மகாந்தன், சின்னத்தம்பி இராமலிங்கம் ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-1-98) ஞாயிற்றுக்கிழமை பி. ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வேம்பிராய் மயானத்தில் நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி சிவஞானம் (மகள்)
திருமதி சியாமளா கந்தசாமி (பேர்த்தி)

வசந்தர் வளவு,
கெருடாவில்,
சாவகச்சேரி.

(சி/2673)

## திருமதி இராசம்மா இராசையா

திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த திருமதி இராசம்மா இராசையா நேற்று (17-1-98) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சிவபதம் எய்திவிட்டார்.

இவர் அமரர் மயில்வாகனம், சொர்ணம்மா, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், மதியாபரணம், அன்னலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசதுரை, தவமணிதேவி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜமோகன், ராஜஜெயசேகரன், மங்கையர்க்கரசி, பிரியதர்சினி, கலாபரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-1-98) ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்;
திருமதி அன்னலட்சுமி இராஜதுரை
(மகள்)
(சிரேஷ்ட பத்திரிகையாளரும், எழுத்தாளரும் வீரகேசரி)
திரு. சோ. மகாலிங்கம்
(மருமகன்)

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

(52712)

## க. அ. சின்னையா

(K. A. சின்னையா அன்சன்ஸ் ஸ்தாபகர்)

க. அ. சின்னையா அவர்கள் 15-01-1998 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், அ. சி. ஜெயரத்தினம், புளோறன்ஸ் ராஜசிங்கம், சாம் ஜீவரத்தினம், ஜேக் ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அருளம்மா, பிரேமலதா, ராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சித்ரா ராஜகுரு, டொனாட் சுகந்தராஜ், சுகந்தினி, வஸீனா, குமுதினி, டிலினி, ஜெனத் ஜீவகுமார், சுஜீவன், சாலினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 19-01-1998 நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக காலை 9.00 மணியளவில் பெந்தகோஸ்தே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. சி. ஜெபரத்தினம்
(மகன்)

கொத்துக்கட்டி வீதி,
நவாலி தெற்கு,
நவாலி.

(52703)

## சந்தேக நபர் பரீட்சை எழுத அனுமதி இல்லை

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் எஸ். வரப்பிரகாஷ் கொலை தொடர்பாகக் கைதான சந்தேக நபர்களில் ஒருவர் பரீட்சை எழுத பல்கலைக் கழக நிர்வாகம் அனுமதி மறுத்துவிட்டது.

2 ஆம் வருட மாணவரான சாந்தன் ரூபன் என்பவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பரீட்சை எழுத அழைத்து வரப்பட்டார்.

ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் இவரை அனுமதிக்கவில்லை. (இ-21)

## ஜே-73 அ. அட்டை

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்நகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டை விநியோகம், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சின்னக்கடை இராணுவ முகாமில் நடைபெறும். (இ)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

அண்மையில் காலமான விஞ்ஞான தொழில் நுட்பத் துறை அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் செய்ஸாவுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்று இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பலர் உரையாற்றவுள்ளனர். (ஐ)

## 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 18

அமலமரித்தியாகிகள் பிரான்ஸில் இருந்து யாழ்ப்பாணம் வந்த 150 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இச் சபையின் உயர் தலைவர் பேரருட் திரு. மாசெல்லோ சாகோ அ. ம. தி. என்பவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இவர் தலைமையில் இன்று மாலை 4 மணிக்கு யாழ் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற உள்ள கலை நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்வார். (இ-9)

## ஐந்துவீத ஓய்வூதிய அதிகரிப்பு

சண்டிலிப்பாய், ஜன 18

கடந்த 1996 ஆம் ஆண்டு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க 1998 ஆம் ஆண்டுக்கான ஐந்துவீத ஓய்வூதிய அதிகரிப்பு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினால் இப்பிரிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம் மாத (ஜனவரி) ஓய்வூதியத்துடன் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-135)


## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
19-01-98 (திங்கள்) வரை
விஜய்,
குமாரி சாலினி
நடித்த
காதலுக்கு மரியாதை
20-1-98 (செவ்வாய்) முதல்
சிவாஜிகணேசன்
நடித்த
வசந்த மாளிகை
[illegible]

(52705)


## திருமண அறிவித்தல்

திரு. மகேந்திரராஜா
(இளைப்பாறிய பிரதம தபாலதிபர்)
அவர்களினதும்
திருமதி மகேந்திரராஜா மல்லிகா
அவர்களினதும் சிரேஷ்ட திருநிறைச் செல்வி
**தவயோகினி**
அவர்களுக்கும்
திரு. திருமதி குமாரசுவாமி
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
**ஆனந்தராஜா**
[Engineer Computor]

அவர்களுக்கும் 19-1-98 திங்கள் அன்று காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் கதிரேசன் பிள்ளையார் கோயில் கொழும்பில் திருமணம் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு உற்றார், உறவினருக்கு அறிவிக்கின்றோம்.

திரு. திருமதி மகேந்திரராஜா
மானிப்பாய் தெற்கு.

(49910)

யா/இளவாலை
## கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின்
பழைய மாணவர் சங்கத்தால்
நடத்தப்பட்ட
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

1 ஆம் பரிசு இல. — 3079
2 ஆம் பரிசு இல. — 3572
3 ஆம் பரிசு இல. — 1762

ஆறுதல் பரிசுகள்

3707, 3442, 1891, 0471, 0002
3005, 3297, 1803, 1713, 1618

இப் பரிசிற்குரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் 31. 01. 98 இற்கு முன் பாடசாலைக் காரியாலயத்தில் வந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் ஆதரவிற்கு நன்றி.

அ. அருளானந்தம்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்.

[52697]

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்:
06
—
09
—
1926



மறைவு:
19
—
12
—
1997

துன்னாலை வடக்கு
## திருமதி செல்லையா சேதுப்பிள்ளை

திதிவெண்பா

ஆண்டு நல் ஈசுவர ஆக்குசேர் மார்கழியில்
சேர்ந்த திதி நல்ல பரச்சட்டியே — நீண்ட
விடையேறும் ஈசன் வியனடியிற் சேது
அடைந்த நாள் என்றே அறி.

அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்கின்றது. அவ்வமயம் வருகைதந்து அவரது ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கும் வண்ணம் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கணவன்
சின்னக்குட்டி செல்லையாவும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும்.

பழமுதிர்சோலை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(52708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துப் பாரம்பரியங்கள் பலவும் இப்போது அருகி வருகின்றன

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் நூற்றாண்டு காலமாகத் தம் வாழ்வில் ஏற்றிப்போற்றி வளர்த்து வந்துள்ள பண்பாடுகள், மரபுகள், நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் கலாசாரக் கோலங்கள் பல. தைப்பொங்கல் கொண்டாடிய இவ்வாரத்தில் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தல் பொருத்தமுடையது.

இந்த நூற்றாண்டின் முற்

> தைப்பொங்கல் தமிழர்கள் பாரம்பரிய கொண்டாட்டங்களில் ஒன்று. அதனை மறவாது எமது மக்கள் கொண்டாடுகிறார்கள். கடந்த புதன்கிழமையும் தைப்பொங்கல் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.
>
> ஆனால் யாழ்ப்பாண மக்களின் பல பாரம்பரியங்கள் மறக்கப்பட்டு விட்டன. அவற்றை எமது இளஞ் சமுதாயம் அறிந்திருக்கவும் வாய்ப்பில்லாதுபோய்விட்டது.
>
> யாழ்ப்பாணம் போற்றி வளர்த்த நூற்றாண்டு காலப் பாரம்பரியங்களில் ஒரு சிலவற்றை இங்கே நினைவுபடுத்தி விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான கட்டுரையாசிரியர்
>
> இதிகாச புராணப்படிப்புகளின்காரணமாகவிவசாயிகள் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து யாழ்ப்பாண மக்களுமே அறிவுக் களஞ்சியங்களாக விளங்கிய காலம் இன்று வரலாறாகி விட்டது

பகுதியில் யாழ்ப்பாணத்துத் திருக்கோவில்கள் அனைத்திலுமே புராணபடனம் முக்கியதோர் இடத்தை வகித்துள்ளது. ஒவ்வொரு கோவிற்பற்றிலும் புராணங்களுக்குப் பயன் கூறத்தக்க பண்டிதர்களும், நல்லாசிரியர்களும் இருந்துள்ளனர். புராண இதிகாச படிப்புக்களை விரும்பிக் கேட்கும் மக்களும் நிறைய வாழ்ந்தனர்.

புராணப்படிப்புக்கள் வெறுமனே புராணப் படிப்புக்களாக மாத்திரம் அமைந்து விடுவதில்லை. அவை ஆன்மீக இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்தாகவும் அமைந்துவிடும். கேட்போர் பக்திச் சுவையிலும் இலக்கியச் சுவையிலும் திளைத்துப் போய்விடுவது வழக்கம்.

திருக்கோவில்களில் படிக்கப்பட்ட புராண, இதிகாசங்களை மக்கள் வீடுகளிலும் படித்தனர். மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவை இவ்விதம் படிக்கப்பட்டன.

மக்கள் எந்த அளவுக்கு இவற்றில் ஈடுபாடு காட்டினர் என்பதற்கு மிகமிகச் சிறிய தோர் உதாரணத்தை இங்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இற்றைக்கு ஆறு, ஏழு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் முழுவதும் மூலை முடுக்கெல்லாம் பல நூற்றுக்கணக்கில் இயங்கிய கைத்தொழிலகக் கொட்டில்களில் வருடம்முழுவதும் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணப் படிப்புகள் இடம்பெற்று வந்துள்ளன. புராண இதிகாசங்களை படிப்பவரும் ஒரு தொழிலாளியாகவே இருப்பார். அவரின் வருமானத்துக்குச் சக தொழிலாளர்கள் தமது உழைப்பின் மூலம் ஒரு பங்களிப்பைச் செய்துவிடுவர். படிப்பு நிறுத்தப்படுகின்ற இடைவேளைகளில் தொழிலாளர்களிடையே இலக்கியச் சர்ச்சைகள் நிகழும். இவை பல பல சந்தர்ப்பங்களில் பட்டிமன்றங்கள் போன்றும்

## கோயில் மரியாதை, குருவணக்கம் இப்போது மறக்கப்பட்டு விட்டன

அமைந்து விடுவதுண்டு.

### தொழிலகம் பட்டிமன்ற மேடையாகும்

இராமாயணப் படிப்பு நிகழும் காலங்களில் ஸ்ரீ இராமன் இராவணன், வாலி, சுக்கிரீவன், கைகேயி கூனி, கும்பகர்ணன் விபீடணன், அனுமான் சீதை போன்ற பாத்திரங்களின் குணவியல்புகள் பற்றி வாதங்களும் எதிர் வாதங்களும் நிகழும். இத்தகைய சர்ச்சைகளில் ஈடுபடுவோர் பட்டிமன்றக்காரர்களைப் போலச் சூடான வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபடும் வேளைகளில் கைத்தொழிலகக் கொட்டில்களைக்கட்டி நிற்பதுண்டு.

இதே போன்று மகாபாரதத்தைப் படிக்கையில் பஞ்சபாண்டவர்கள் துரியோதனனாதியோர், சகுனி மாமா, கிருஷ்ணபரமாத்மா போன்ற கதா பாத்திரங்கள் பற்றியும் விவாதங்கள் நிகழும்.

இவை காரணமாகக் கைத்தொழில் எதுவும் தடைப்படுவதில்லை. அது தன்பாட்டிற்குச் சுருண்டு தவழ்ந்து ஓடிக் கொண்டிருக்கும்.

### வில்வலன் வாதாவி

ஒரு சமயம் எமது கிராமத்து முதியவர்களுள் ஒருவ

> இதிகாச, புராணப் படிப்புக்களின் காரணமாக விவசாயிகள்தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து யாழ்ப்பாண மக்களுமே அறிவுக்களஞ்சியங்களாக விளங்கிய காலம் இன்று வரலாறாகி விட்டது.

ரான பெரிய விவசாயி ஒருவர் ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோவிலுக்கு காலைத் தரிசனத்துக்காகவந்துகொண்டிருந்தார். அப்போது கோவில் முன்றலில் நின்று கொண்டிருந்த இரு இளைஞர்களை எனக்குச் சுட்டிக்காட்டி ''தம்பி இவர்கள் இருவரும் வில்வலன் வாதாவி போன்றவன்கள்'' என நகைச்சுவையாகக் கூறினார்.

அந்த இரு இளைஞர்களுக்கும் முதியவரின் பகிடி புரியவில்லை இருவரும் 'திரு திரு' வென விழித்தனர்.

காரணம் — படித்த அவர்களுக்குக் கந்தபுராணக் கதாபாத்திரங்களைப் பற்றி எதுவுமே தெரியாதது தான். நகைச்சுவையை உதிர்த்தவர் மிகப்பெரிய புகையிலை வியாபாரியுமாவார். அவருக்கு விநாயகர் புராணம் உட்பட எல்லாப் புராண இதிகாசங்களும் தலைகீழ்ப் பாடம். புராண இதிகாசப் படிப்புக்களின் காரணமாக விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து யாழ்ப்பாண மக்களுமே அறிவுக் களஞ்சியங்களாக விளங்கிய காலம் இன்று வரலாறாகி விட்டது.

### கோயில் மரியாதை

அந்தக் காலத்தில் யாழ்ப்பாண மக்களின் நடைமுறைப்

## சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பகம்

குன்றக்குடி அடிகளார், நாவலர் பெருமான், பண்டிதமணி போன்ற பெரியவர்கள் ஓர் ஊருக்கு அல்லது விழாவிற்கு வருகை தருகையில் அவர்களைக் கோவில் மரியாதைகளுடன் வரவேற்பதாகும். அதாவதுகொடி, குடை, ஆலவட்டம், சங்கு, சேமக்கலம், மேள தாளங்களுடன் அவர்களை ஊர் முகப்பில் எதிர்கொண்டு அழைத்து வருவது வழக்கம். இந்த மரபு இன்றும் சிங்களக் கிராமங்களில பெரிதும் பேணப்படுகின்றது.

### குருவணக்கம்

அந்தக் கால மாணவர்கள் அனைவரும் தத்தமது குருவின் பாதம் பணிந்து அவர்களுக்குப் பணிவிடை செய்து பயின்று பண்பாளர்களாக வளர்ந்தனர். திருநெல்வேலியில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்

செல்லப்பா நடராசா

பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலத்தில் முப்பத்தேழு வருடங்களாகத் தினசரி அன்னாரது இல்லம் சென்று அவருக்குப் பணிவிடை செய்த நல்லாசிரியர் ஒருவர் இன்று ஆசிரியமணியாக உயர்ந்து ஒரு பண்பாட்டின் சின்னமாக நம்மிடையே திகழ்கிறார்.

கடந்த வருட ஆசிரியர் தின விழாவிற்கு ஒரு பாடசாலைக்கு அழைப்பின் நிமித்தம் சென்றிருந்தேன். மாணவர்கள் மலர் தூவித் தமது ஆசிரியர்களை வரவேற்றனர். மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வின் போது ஒரே ஒரு மாணவன் மட்டும் தமது வகுப்பாசிரியையின் பாதங்களைத் தொட்டு வணங்கியதை அவதானித்தேன். ஆயிரத்தில் ஒருவன் அந்த மாணவன்.

### திருநீறு

பண்டு தொட்டு யாழ்ப்பாண மக்கள் தமக்குத் தேவையான திருநீற்றைத் சைவ ஆகம முறைப்படி வீடுகள் தோறும் தாமே தயார் செய்து அணிந்து வந்துள்ளனர். திருஞானசம்பந்தர் கூறிய மந்திரமாவதும் சுந்தரமாவதும் அந்தத் திருநீறே யாகும். திருநீறு போன்ற வேறு ஒரு நீறு திருநீறு ஆகிவிடாது. அது நோய் நொடி தீர்க்கும் மருந்துமாகாது.

### சந்தனம்

யாழ்ப்பாணத்துத் திருக்கோயில்கள் அனைத்திலும் மிகமிக நீண்டகாலமாக சந்தனம் அரைக்கும் கற்களும் சுத்தமான மைசூர் சந்தனக் கட்டைகளும் புழக்கத்தில் இருந்ததை எவரும் அறிவர். சுத்தமான சந்தனத்தையே அனைவரும் அணிந்தனர். அச் சந்தனப் பொட்டானது நறுமணம் கமழ்ந்தபடியே இருக்கும். இக்கால இரசாயனக் கலவைகளால் நறுமணம் ஊட்டப்பட்ட எந்தச் சாந்தையும் சந்தனம் என்று அழைக்க முடியாதுள்ளது.

திருக்கோயில்களில் மட்டுமன்றி குடியிருப்புக்களின் அனைத்துக் கிணற்றுக் கட்டுக்களிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சந்தனம் அரைக்கும் கற்களை வைத்துக்கட்டி, சந்தனக்கட்டைகளையும் பயன்படுத்தினர் எமது முன்னோர். நீராடிய பின் விரதகால அனுட்டானம் பார்க்கையில் தூய புனிதமான சந்தனத்தை அணிந்த பெருமை அவர்களுக்குரியது.

### நாகரிகமாகாது

மார்கழி மாத திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலையில் கிராமங்கள் தோறும் பஜனை ஊர்வலங்கள் நடைபெறுவது அந்தக் கால வழக்கம். மனதுக்கு இன்பம் பயப்பதோர் நிகழ்வு இது இவ்வழக்கம் இன்று அருகிவிட்ட நிலையில் இடம்பெயர்ந்து தென்மராட்சியில் கல்வயலில் இருந்த வேளையில் அங்கு இத்தகைய பஜனை ஊர்வலங்களைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஒரு சமூகம் தனது கலை கலாசார பண்பாட்டுக் கோலங்களை மறப்பதோ இழப்பதோ நாகரிகமாகாது. தை பிறந்த முதல்வாரத்தில் எமது பாரம்பரியமான உன்னதமான பண்பாடுகளைப் பற்றிச் சற்று பின்நோக்கிச் சிந்தித்து எம்மை நாமேஎடை போட்டுக் கொள்வோமாக.

★

# இறை தடாகத்தின் தாமரைகளாக மிளிரும் வாழ்க்கையை அமைப்போம்

மனித அவதாரம் எடுத்த ஒவ்வொருவனும், இப்பிரபஞ்சத்தின் கண்ணே எவ்வளவு காலம் உயிர்வாழ்ந்தான் என்பது அல்லகேள்வி அவனிடம்குடிகொண்ட திறமையும்; அர்ப்பணமும்என்ன? அவன் செய்த தியாகமும், நற்பணிகளும் எவை? அவனிடம் சிறந்துள்ள அரும் பெரும் பண்புகளும், குணங்களும் எவை, என்பவைகளே அவனை மக்களின் இதயங்களிலே முழுமனிதனாக, மனுஈசனாக காலம் யாவும் நிலை நிறுத்துகின்றன.

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், உதட்டிலும், கருமத்திலும் தூய்மையும், வாய்மையும் நியாயமும் தியாகமும், அன்பும் இழையோடினால், ஞானத்திலே அதர்மம், அநீதி, அக்கிரமம் என்பவைகள் தலைதூக்க இடமே இல்லை.

முழுமனதுடன் தன்னை ஒறுத்து, தன்னைமறந்து; தன்னை அர்ப்பணித்து; மெழுகுவர்த்தியைப் போல் தன்னை அழித்து பிறருக்கு ஒளிபகரும் திவ்விய ஒளி விளக்காகத் திகழ்பவனே உயர்ந்தவனாகின்றான். நீ போய் உனது உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு; பின்பு வந்து என்னைப் பின்பற்று. மத் 19.21'

தேவைக்கு மிகுதியாக இருப்பதில் சிறு பங்கையாவது கொடுத்து உதவும் மனப்பாங்காவது வேண்டாமா? பிறரின் துன்பச் சுமைகளை வேதனையின் ஓலங்களை அறிந்தும் அறியாதவர்களாக உதவிபுரியும் வசதிகள் இருந்தும் [illegible] களாக வாழ்ந்து [illegible] பெயரளவில் இரக்கம்; ஈகை; தானம்; தருமம் பற்றி அலட்டுவது; நித்திரையில் வாய் பிதற்றுவது போலாகும். அண்டை; அயலான் அழுது துடிதுடிக்க; சோர்வுற நாம் உண்டு குடித்து அகமகிழ்வது சரியா? போலி வேடமும், கவர்ச்சியும், ஆடம்பரமும் நிறைந்த வாழ்வில் மயக்கமுறும் மனித இனத்தி

## ஞாயிறு நற்பிரசாதம்

டம் இன்று மனச்சாட்சி அருகுகின்றது. மனிதத்துவம் [illegible] இந்த நிலையில் மனிதத்துவத்தை பேணுவது, உயர்த்துவது எப்படி? எப்படியும் வாழலாம் என்றல்ல இப்படித்தான் வாழவேண்டும் என்ற இலட்சிய வரையறைக் கோப்புக்குள் நின்றுதான் வாழவேண்டும். மனிதத்துவத்தை உயர்த்தவேண்டும்.

எம் மண்ணின் மைந்தர்களாகிய எமது சகோதரர்கள் சிந்திய இரத்தம் யேசு சிந்திய இரத்தம் என்பது எமது சிந்தனையிற் தோன்றவில்லையா? யாரும் நினையாத வேளை மனுமகன் மேகத்தூண்களிடையே உலாவரும்போது 'மிகச்சிறியவர்களாகிய என் சகோதரர்களுக்கு நீங்கள் எதைச் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லையே.' என்பார்.

மத் 25: 45

இந்தச் சிறியவர்கள் யார்? மிக வறியவர்கள், அனாதைகள், ஊனமுற்றோர், கைதிகள், நோயாளிகள், நிராயுதபாணிகள், புத்திசுவாதீனமற்றோர், வீதியோரம் வாழ்வோர், பாதுகாப்பற்றோர். பராமரிப்பற்ற முதியோர் என்போரே யானை அல்வாவை விழுங்குவதைப் போல பணக்குவியல்களையும், உடைமைகளையும் தம்மவர்களோடு மட்டும் பங்கீடு செய்துவிட்டு ஏழைகளை ஏளனஞ் செய்யும் படாடோப செயல்கள் நிதர்சனமாகிவிட்டன. ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு இறைமகன் பகிர்ந்து விருந்தளித்தார். ஆனால் எளியோர் மத்தியில் எம்மவர் பகிர்வதோ, குரங்கு அப்பம் பகிர்வதைப் போன்றே வேடிக்கையாக உள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில்
# அமலமரித் தியாகிகளின் 150 ஆண்டுகள்

## இறைப்பற்று - மனிதநேயம் - தூரநோக்கு

## குருமாமணி ஞானப்பிரகாச அடிகள்



யாழ். கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் காத்திரமான பங்களிப்புச் செய்து இன்னும் மக்கள் நெஞ்சங்களில் உயிரோவியமாக நிலைத்து நிற்பவர் புகழ்பூத்த அமலமரித்தியாகி ஞானப்பிரகாசர் அடிகள். தமிழ் ஈழத்தின் இதயமாக உயர்ந்து நிற்கும் யாழ். மண்ணிற்கு அணிசேர்க்கும் திருவூர் மானிப்பாய். பழுத்த சைவர்கள் வாழும் புண்ணிய பூமி அது. இம் மண்ணிலே சைவ அறநெறிகளை வழுவாது கடைப்பிடித்து வாழ்ந்த இந்துப் பெருங்குடியில் கண்ணியம் மிக்க இந்துப்பெற்றோருக்கு மைந்தனாக அவதரித்தார் சுவாமி நாதபிள்ளை ஞானப்பிரகாசர். தமிழ் மொழிக்கும் தம் சமயத்துக்கும் எதிர்காலத்தில் ஈடில்லாப் பணிகள் புரிவாரென்ற தத்துவத்துக்கு இலக்கணம் போல் வளர்ந்து முதிர்ந்து துறவறக் குருவானார் அமலமரித்தியாகிகள் சபைக்கும் யாழ். அமலிகளுக்கும் மங்காப் புகழ் சேர்த்தார்.

கத்தோலிக்க மதமும், தமிழ்மொழியும் அவரது இரு கண்களாகவும் மனித மேம்பாடும், ஆன்மீகத் தாகமும் அவரது இதயத்துடிப்பாகவும் விளங்கின. இம்மண்ணில் அவரால் சமயம் பரவியது. புதுமை - தமிழ் வளர்ந்தது. இனிமை - கத்தோலிக்க திருச்சபை சிறப்புற்றது. பெருமை - சமூகம் பொலிவு பெற்றது. அருமை - எழுத்தியலில் அடிகளார் ஒரு வித்பன்னர்.

பல்கலைக் கழகங்களைக் காணாத அவர் நடமாடும் சிறந்த பல்கலைக் கழகமானார் தன் சொந்த முயற்சியால், ஆய்வுகளால் பெரும் ஆசான் ஆகவும், கல்விமானாகவும், எழுத்தாளனாகவும் தன்னை மாற்றிக் கொண்டார். இறைவன் தனக்கருளிய அனைத்து ஆற்றல்களையும் விண்ணரசுப் பரப்புதலுக்காக முற்று முழுதாக பயன்படுத்திய இவர் பலரின் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பாக ஏழைகளின் அறிவுப்பசிக்கு உணவானார்.

செபநூல்கள் - சமயஅனுசாரநூல்கள் - மறையுரைநூல்கள் - வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் - சமயவரலாற்று நூல்கள் - துண்டுப்பிரசுரங்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற வரிசையில் நூற்றுக்கணக்கான அரிய நூல்களை எழுதி சமயமும் தமிழும் சீர்பெற்று வளர வித்திட்டார். ''குடும்பவாசகம்'' என்னும் மாத சஞ்சிகையொன்றை வெளியிட்டு புது விசுவாசிகளின் சமயஅறிவை ஆழமாக்கினார். திருச்சபைக்கொள்கைகள் - துறவுநிலை, திருச்சபை வரலாறு, திருவழிபாடு என்ற கருப்பொருளில் பல நூல்களை யாத்தார்.

அடிகளார் புகழ்பூத்த மறையுரை ஞராசவும் பிரகாசித்தார். உயர்ந்த உருவமும், கவர்ந்திழுக்கும் தோற்றமும், அறிவுக்கூர்மையும், வேதாகம பாண்டித்தியமும் காலத்தின் குறியீடுகளை சூழ்நிலைக்கும், நற்செய்திக்கும் இசைவாக மொழிபெயர்க்கும் நுண்ணறிவும், ஆன்மாக்களை அர்ச்சித்து மந்தைகளைப் புனிதப்படுத்தி வலுப்படுத்தும் தணியாத தாகமும் ஒன்று திரண்டு அடிகளாரை மிகவும் பிரபல்யம் வாய்ந்த போதகராக மாற்றியது.

அடிகளார் தமிழ் மீது கொண்ட காதலால் அம்மொழியின் மூலவேர்களைக் கண்டறிந்து, அந்த மொழியே உலகின் மூத்த மொழி என்று சூளுரைத்தார். இந்த ஆராய்ச்சிக்காக பல மொழிகளை தானே தனித்து கற்றுக்கொண்டார், பாண்டியத்தியம் பெற்று பல ஆராய்ச்சி நூல்களையும் தொகுத்தார். தமிழ் அவரால் வளர்ந்தது; சமயம் அவரால் வேரூன்றியது. இந்த மொழியின் ஆர்வம் மேலும் அவர் தனது சமயப்பரப்புதல் பணியை புதிய கண்ணோக்குடன் முன்னெடுத்துச் செல்லத் துணை நின்றது.

இந்த மாமனிதனின் உதிர்வின் 50-வது ஆண்டையும், அமலமரித் தியாகிகள் சபையினர் இம்மண்ணில் கால் பதித்த 150-வது ஆண்டையும் நினைவு கூரும் நாம் அனைவரும் இந்த உத்த குருவின் வாழ்வுக்காக, கொடைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். இவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி சமகால அமலமரித்தியாகிகளும், வருங்காலத் துறவிகளும் இறைவனை முற்று முழுதாக விசுவசித்து அன்பு செய்யவும், தம் மறை பணிகளில் மனித மாண்பைப் பேணவும் ஆசிப்போமாக.

''கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள யாவற்றையும்
குப்பையெனக் கருதினேன்''

— ம. போல் நட்சத்திரம் அ. ம. தி.

## கல்வியே கண்கள்

அமலமரித் தியாகிகள் யாழ். வருகையின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் அவர்கள் கல்விக்கு ஆற்றிய சேவையை நன்றியுணர்வுடன் சிந்திக்க விரும்புகின்றோம். இவர்கள் பல பாடசாலைகளை நிறுவி, அவற்றில் முக்கியமாக புனித பத்திரிசியார் கல்லூரியை வளர்த்தெடுத்தார்கள். இவ் விடத்தில் இவர்களது சேவையை மீட்டுப்பார்ப்பது பொருத்தமானது.

யாழ். மறைமாவட்டத்தின் வரலாற்றில் முதல் முதலாக நிறுவப்பட்ட கத்தோலிக்க ஆங்கில பாடசாலை, புனித பத்திரிசியார் கல்லூரியே ஆகும். 1850 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது முகாமையாளராக இருந்தவர் அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மௌறோ ஆவார். முதலாவது அதிபர் திரு பற்றிக்வொய் ஆவார். ஆயர் பெற்றக் கினிபை அடுத்து ஆயர் J. S. சமாரியா அ. ம. தி ஆண்டகை பதில் ஆயரானார் இவர் முன்னைய வரைப் போல் கல்வியில் அதிக அக்கறை காட்டி பாடசாலையை மேலும் சிறந்த முறையில் அமைக்க முயற்சி செய்தார். இதன் பொருட்டு நிதி சேர்த்து பாடசாலையை உரியமுறையில் நிறுவினார்.

1856 இல் அருட்தந்தை பொஞ்சீன் அ. ம. தி. புரட்டஸ்தாந்து மிஷனறி பாடசாலைகளில் பயின்ற கத்தோலிக்க பிள்ளைகள் கத்தோலிக்க வேதாகமத்தையே படிக்க வழிசெய்தார் பாடசாலை ஆணைக்குழுவால் புரட்டஸ்தாந்து மிஷன்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுவந்த அரசாங்க உதவிப் பணத்தை கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் கிடைக்கும்படி இவர் செய்தார். இவருடைய காலத்திலேயே இப் பாடசாலையில் உயர் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலத்தீன் உயர் தமிழ்மொழி முதலிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது வரை காலமும் ஐரோப்பியர் கற்பித்த இப்பாடசாலையில், திறமையான சுதேச ஆசிரியர்களும் கற்பித்தலுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஆங்கில மாகாண அ. ம. தி மாகாண முதல்வர் வண. பிதா கூக் அடிகள், குடியேற்ற நாடுகளுக்காக தரமான ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்று வித்து அனுப்பினார்.

1874 ஆம் ஆண்டு வண. பிதா பிளாங்கன், கொழும்பகம் அநாதைகள் இல்ல நிர்வாகியாகவும், கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராகவும் பணியாற்றி 1889 இல் இறைவனடி சேர்ந்தார். சுதேச ஆசிரியர்களைக் கொண்டு பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஊக்கம் கொடுத்தமைக்காக இவர் பாடசாலை பரிசோதகராகிய திரு. சீடோன் என்பவரால் பாராட்டப்பட்டார்.

1903 இல் வண. பிதா. சாள்ஸ் மத்தியூஸ் அ. ம. தி இக் கல்லூரியின் ஆசிரியர் குழாமில் இணைந்து, தொடர்ந்து அதிபரானார். 1904 இல் பழைய மாணவர் சங்கத்தையும் 1905 இல் கல்லூரி சஞ்சிகையையும் ஆரம்பித்தார். இவருடைய காலங்களில் விஞ்ஞான பாடங்களின் ஊக்குவிப்புக் கொடுத்தார். விஞ்ஞான ஆய்வு கூடமும், மேலதிக வகுப்பறைகளும் நிறுவப்பட்டன. இவருக்கு உதவியாக வண. பிதா பெயுட் அ. ம. தி. அடிகள் செயற்பட்டார்.

1921 இல் வண. பிதா T. M. F லோங் அ. ம. தி அடிகள் ஆசிரியர் குழாமில் சேர்ந்தார். அதே வருடத்தில் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் இலங்கையில் மட்டுமல்ல பிரித்தானிய குடியேற்ற டொமினியன் பாடசாலைகளிலும் பார்க்க சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரி பலராலும் புகழப்பட்டது.

வண. பிதா சமித் அடிகள் கல்லூரியின் அதிபராக இருந்த போது தனது முழு ஆளுமையையும் பயன்படுத்தி கல்லூரி சிறக்க அரும்பாடுபட்டார். அருட்தந்தை டியோமர் அ. ம. தி அடிகளும் எமது கல்லூரியின் அதிபராகப் பணியாற்றினார். அவ்வாறு அவர் பணி செய்த காலத்திலேயே அவர் ஆயராக அபிசேகம் பெற்று யாழ். மறை மாவட்டத்தை நிர்வகித்தார்.

இவ்வாறாக இவ்வளவு காலமும் வெளிநாட்டுக் குருக்கள் அதிபர்களாக இருந்து கடமையாற்றிய கல்லூரியின் புதிய கட்டமாக முதல் சுதேச அதிபராக வண. பிதா S. N. அருள்நேசன் அ. ம. தி அடிகள் நியமிக்கப்பட்டார். இவரும் வெளிநாட்டுக் குருக்களைப் போல எமது கல்லூரியை வளர்க்கப் பல வழிகளிலும் உழைத்தார்.

இவர்களைத் தொடர்ந்து அ. ம. தி சபையைச் சேர்ந்த அருட்தந்தை யோன் பிரான்சிஸ் அடிகளாரும் அண்மைக் காலங்களில் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக முன்னைய அதிபர்களைப் போல தமது பங்களிப்பை முழுமையாக வழங்கினார்.

அ. ம. திகள் கடந்த 150 ஆண்டுகளில் யாழ். மண்ணில் ஆற்றிய கல்வி வளர்ச்சியின் பிரதிபலிப்புதான் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகும். இக் கல்லூரியின் இன்றைய வளர்ச்சியானது இக்கல்லூரியின் அதிபர்களாகவோ ஆசிரியர்களாகவோ கடமையாற்றிய அ. ம. திகளையே சாரும்.

— அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி

## அமல மரித் தியாகிகள் அருட்பணி

பெற்றுவளர் தாய்தந்தை சோதரங்கள்
பெருங்கிளைஞர் உவங்கலந் தோர் ஒருங்கிணைந்தே
உற்றபல சுகபோக மாயை நீத்து
உலகை மீட்பர் தொண்டுக்காய்த் துறவு பூண்டோர்
பற்றுடனே பணிபுரியும் அமல மரியாள்
பரித்யாகச் சற்சபையோர் பாரிற் கண்ட
வெற்றமுறு நூற்றைம்பான் ஆண்டு விழாவின்
கோலமுறு பாக்கிய நாள்; இந்நாள்; பொன்னாள்.
மாசிறந்த பிரான்ஸ் நாட்டிற் பிறந்த செல்வன்,
மதிசிறந்த மாண்புடையோன் மறைநூல் சொல்லும்

தேசுநிறை நற்செய்திக் கடலை நீந்தி
தெள்ளமுதத் திரவியங்கள் தேர்ந்தெடுத்தோன்;
ஆசகலும் இச்சபைக்குத் தேவ அருளால்
அத்திவாரம் இட்ட ஓர் ஆன்ம நேயன்;
தேசுமறி நற்செய்தித் தீர்க்க தரிசி;
திருமுதல்வர் யூஜின் டீ மசநட் குருவே.

'அனைவர்க்கும் நற்செய்தி அருளல்' என்னும்
அருள் வாக்கைத் திருவாக்காய் அகம்பதித்துக்
கனவினிலும் அதன் நினைவாய்க் கடமை செய்யக்
கரசினியின் கண்போன்ற சமுதாயத்தின்
மனமாசை அகற்றுமறைக் கல்வி யூட்டும்
மாபெரிய கலைக்கூடம் மருத்துவ சாலை
ஊனமுறும் அநாதை யில்லம் விடுதிச் சாலை
ஊசனா டகதிமுகாம் உரைக்க ஒன்றோ.

— கவிமாமணி க. கு. ஞானப்பிரகாசம்

(விளம்பர இல. சி/2671)

## முதலும் முடிவும்...

(ஐந்தாம் பக்கத் தொடர்)
கிய கல்வி நிறுவனங்களுக்குச் சுருக்குக் கயிறு போடப்பட்டது. அதுதான் கத்தோலிக்கபாடசாலைச் சுவீகரிப்பு, நூறு வருடங்களாக நவீன சமகால கத்தோலிக்க மறுமலர்ச்சிக்கு ஊற்றாக அமைந்தவை அமலமரித் தியாகிகள் நடத்திய பள்ளிக் கூடங்களே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிரம்பிய பல புத்திஜீவிகள் இக்கல்விக் கூடங்களிலேயே சேவையாற்றினர், வருங்காலக் குருகுலமும் இல்லறத் தலைவர்களும் இக் கூடங்களிலேயே உருவாக்கப்பட்டனர்.

எனவே இப்பாடசாலைச் சுவீகரிப்பை ''கல்வியுலகின் சோதனைக் காலம்'' என்று ஒரு பிரபல பத்திராகிரியர் கூறியதில் வியப்பேதுமில்லை. இப்பெருஞ் சோதனையை ஆயர் எமில் அவரது திருச்சபையுடன் (இல்லறத்தோர், குருகுலத்தோர்) பாடசாலை மறியற் போராட்டமாக இறுதிவரை அறவழியில் அஞ்சாது எதிர்த்து நின்றார்.

திருச்சபையின் ஒரு பெரிய அரணாக - அணையாக கத்தோலிக்க கல்வி அன்று தென்பட்டது. அது உடைந்தாலும் இந்த இறுதி அ. ம. தி. ஆயரின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகவே விளங்குகிறது.

100 வருட அமலமரித் தியாகிகளின் பணிக்காலம் ஆயர் எமிலின் முதலும் முடிவுமாக அமைந்து வரப்போகும் சமகால அழிவுகளுக்கும், சிதைவுகளுக்கும் முகங்கொடுக்க திருச்சபையை ஆயத்தம்பண்ணி ஒரு புதிய அடித்தளத்தில் அமர்த்தியது.

— அருட்திரு.
R. J. F ஜெயசீலன்

## அமலமரித் தியாகி..

(ஐந்தாம் பக்கத் தொடர்)
செபமும், தாராள மனப்பாங்கும் பாதுகாப்பளித்தன. சத்தியமறை தந்த மெய்ஞ் ஞானச் செல்வர்களின் சாதனையை உலகு பாராட்டியது.

1848-ல் ஆரம்பித்த பணி, 1948 வரை 90 ஆண்டுகளில் உயர்தரப் பாடசாலைகள் பதினைந்துள் பத்து கத்தோலிக்க பாடசாலைகளையும், 534 முதற்றரமான சுய மொழிப் பாடசாலைகளையும் உருவாக்கிக் கத்தோலிக்க கல்வி வளர்ச்சியின் மகத்துவத்துக்குச் சான்று பகர்ந்தது.

1960 களில் ஏற்பட்ட வேறு காரணிகளால் கத்தோலிக்க பாடசாலைகளில் ஒரு சரிவு நிலை காணப்படுவது உண்மைக் கத்தோலிக்கரின் உள்ளங்களை வாட்டி வதைக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில், பேரருள் திரு. பொஞ்சின் அடிகளார் எழுதிய இலங்கை வாழ் கத்தோலிக்கரின் மாபெரும் உரிமை ஆவணமாகப் போற்றப்படுகின்ற ''கத்தோலிக்க கல்வி பற்றிய சில வார்த்தைகள்'' என்ற பிரசுரமானது உளஞ் சோர்ந்திருக்கும் எமக்கு ஓர் உந்து சக்தியாக உதவும்.

— அருட்செல்வி
யோலண்ட் மத்தியாஸ்
அதிபர்
யாழ். தி. கு. க.
ஆங்கிலப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வட இலங்கையில்

# அமலமரித் தியாகிகளின் 150 ஆண்டுகள்

## இறைப்பற்று - மனிதநேயம் - தூரநோக்கு

18-01–1998

## யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி



அமலமரித் தியாகிகளுடைய வருகை இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் இன்றும் நினைவு கூரப் படும் மைல் கல்லாக அமைந்துள்ளது. அவர்களின் வருகையால் மறைப்பரப்புப் பணியில் புதிய அத்தி யாயம் பிறந்தது. புனிதரும், நிறுவுனருமான இயூஜின் டி மசநட் தனது குருக்களை மறைபரப்புப் பணி யாளர்களாக 1848 இல் இலங்கைத் தீவிற்கு அனு வும் யாழ். மறைமாவட்டத்திற்கு அனுப்ப எடுத்த தீர்மானத்தை மிக நன்றியோடு நினைவு கூருகின் றோம்.

அவர்கள் இங்கு வந்து எமது மொழியினைக் கற்று, மகா ஞானவொடுக்க முயற்சிகளைப் பங்கு தோறும் மேற்கொண்டு தூர்ந்துபோன விசுவாசத்தை மீண்டும் கட்டியெழுப்பினர். இதற்குதவியாக மரி யன்னையின் பக்தியை மக்கள் மத்தியில் பரப்பிவிசுவாசத்தில் ஊன்றச்செய் தனர். இவர்களது பணியானது பங்குகளிலும், புதிய கிறிஸ்தவ சமூகங் களை உருவாக்குவதிலும், கல்விப்பணியை முன்னெடுத்துச் செல்வதிலும் வெகு விரைவாக வளர்ச்சியுற்றது.

பெரிய குருமடத்தை நிறுவி, சுதேச குருக்களை உருவாக்குவதில் பாடுபட்டு உழைத்தனர். இலங்கையின் மறைமாவட்டக் குருக்கள், அமல மரித் தியாகிகளின் தூரநோக்கிற்கும், அயரா முயற்சிக்கும் வெகுவாகக் கடமைப்பட்டுள்ளனர். யாழ். மறைமாவட்ட மக்களில் காணப்படும் ஆழ மான விசுவாசம், மரியன்னை மட்டிலான சிறந்த பக்தி என்பன அமல மரித் தியாகிகளின் பணிகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

150 ஆவது வருட நிறைவை நினைவு கூரும் இத்தருணத்தில் பரிசுத்த தந்தை எமக்குக் கூறும் புதிய மறைபரப்புப் பணிக்கு உந்து சக்தியாக, எதிர்காலத்தில் அமலமரித் தியாகிகள் விறுநடை போட்டு வழிகாட்ட வேண்டுமென்று நல்லாசி கூறுகின்றோம்.

பேரருட் திரு. தோமஸ் சவுந்ரநாயகம்
யாழ். ஆயர்

## காலத்தின் குறிகளைப் புரிந்து செயற்படுவோம்

அமலமரித்தியாகிகள் எம் யாழ். மண்ணிலே 1848 ம் ஆண்டு காலடி பதித்தனர். இப்புதிய ஆண்டு அவர்களது வருகையின் 150-ம் வருட நினைவாகும்.

''பொழுது போக்காய்க்
குழந்தைகளும் பிறப்பதில்லை- படைப்பின்
ஒழுங்கின்றி ஒரு
கிழவி கூட இறப்பதில்லை''

என்பதற்கிணங்க அமலமரித்தியாகிகள் சரித்திரத்தில் பதித்த சுவடு கள் இறைவனின் திட்டத்திற்கு இசைவாக இருப்பதையும் எல்லாம் வல்ல இறைவனின் பிரசன்னம் என்றும் அவர்களோடு இருப்பதையும் உணருகின் றோம்.

யாழ்ப்பாண, மன்னார் மறைமாவட்டங்களில் கத்தோலிக்க விசுவாசத் தைக் கட்டியெழுப்பி வளர்த்ததில் அமலமரித்தியாகிகளின் பங்கு மகத் தானது. சுதேச குருக்களின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும், நற் செய்தி அறிவிப்புப் பணியிலும், மொழி, கல்வி கலாசாரப் பணிகளிலும் அவர்கள் ஆற்றிய அரும் பெரும் சேவைகள் வரலாற்றோடு கலந்துவிட்ட அழியாத நினைவுச் சின்னங்களாகும்.

''மிஷனறி'' மாராக எங்கள் மத்தியில் பணிசெய்த எம் மண்ணோடு கலந்துவிட்ட பல்வேறு நாட்டைச் சேர்ந்த குருக்களை நன்றியோடு இவ்வேளையில் நினைக்கின்றோம். இந்தியா, பாகிஸ்தான், கொரியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் எமது குருக்களோடு செபத்திலும், சகோதர அன்பிலும் இணைகின்றோம்.

போர்க் காலச் சூழலில் பல்வேறு பணித்தளங்களில் மக்களோடு மக்களுக்காகப் புத்துணர்ச்சியோடு பணிசெய்து கொண்டிருக்கும் எம் சக குருக்கள் மட்டில் பெருமை அடைகின்றோம். எமது அமலமரித் தியாகிகள் சபையின் உள் உயிர் (Charism) காலத்தின் குறிகளுக்கேற்ப புரிந்து வாழப்படவேண்டுமென இந்த 150- வது யூபிலி ஆண்டிலே ஆசி கூறி நிற்கின்றோம்.

அருட்திரு. பி. யேசுநேசன் அ. ம. தி.
முதல்வர் யாழ். மாகாணம்.

## முதலும் முடிவும்

150 வருட அமலமரித் தியாகிகளின் ஈழத்து வர லாற்றில் ஏழு ஆயர்கள் ஒரு வரலாற்றுப் பாலமாகத் திகழ்ந்தனர். அவர்களின் கீழ் அமலமரித்தியாகிகளின் பொற்காலமெனக் குறிப் பிடக்கூடிய அளவுக்கு பல முக்கிய மிஷனரிகள் (குருக் கள்) பணியாற்றினர். அவர் களில் கிப்பொலிற், மரு சலின், பிரான்சிஸ், ஆசீர் வாதம், ஞானப்பிரகாசர், குருசாமி, யோசவ், சிங்க ராயர், அன்ரோனைனஸ், அருள்நேசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆயர் பெற்றக்கினியின் வேண்டுதலுக்கிணங்க அம லமரித்தியாகிகள் சபையின் நிறுவனர் மசனற் ஆண்டகை அனுப்பியசமேரியா தொடக் கம் கியோமார் வரையி லான ஆறு அ.ம.தி ஆயர் களும் (1848 – 1950) மூன்று முக்கிய குறிக்கோள்களை கொண்டிருந்தனர்.

ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலங்களில் வலுவிழந்து இருந்த திருச்சபையை, உயிர்ப்புப்பெற வைத்தல் நவீன அமைப்பை ஏற்படுத் தல், அதை தம் வரலாற்று முக்கிய பங்களிப்பின் காலம் முடியும்போது ஒருவலுவுள்ள சுதேச குருகுலத்தையும் அவர்களுக்கு பக்கபலமாக ஆங்கில தமிழ்க் கல்விகற்ற புத்திஜீவிகளையும் ஆசிரியத் தலைவர்களையும் ஆக்கி வைத்தல் என்பன அந்தக் குறிக்கோளாகும்.

வரவிருந்த இறுதி அமல மரித்தியாக ஆயரும் முதற் சுதேச (தமிழ்) ஆயருமான எமிலியானுஸ் ஆண்டகை காலத்தில் முன்னைய ஆயர் களின் நூற்றாண்டு உரு வாக்க காலத்தில் எழுந்த சாதனைகள் இந்த மண்ணுக் கும், மக்களுக்கும் அருள் அருட்சாதனமாக அமைந்த திருச்சபைக்கும் நவீன சோத னைக்களமாக மாறின. அக் கட்டத்தில் சபைவரலாறு தூய ஆவியின் நெருப்பி னால் புடமிடப்பட்டு அவர் களின் அறுவடை சோதியா அல்லது கனஞ்சிய செந்நெல் மணிகளா என்பதை புல னாக்கியது.

1950, 60களில் ஆயர் எமி லின் காலகட்டத்திலேயே அது நிரூபிக்கப்பட்டது. 1956, 57 களில் இலங்கை யின் ஆட்சியை கைப்பற் றிய ஐக்கிய முன்னணி (M.E.P) கூட்டாச்சியின் காலகட்டம் திருச்சபையின் சோதனைக் காலமாகியது. முதலில் அது திருச்சபையின் வெளிநாட்டு மிசனரிக் குருக் களை வெளியேற்றியது. அமலமரித்தியாகிகளின் இளங் குருக்களான சார்வே, குஷ ரோகன், கரோவ் முதலிய குருக்கள் வெளியேறினர். இவர்கள் யாழ் திருச்சபை யின் பங்குத்தளங்களிலும் அமைப்புகளிலும் அளப்பரிய சேவையாற்றியவர்கள் பசு மையான மனப்பதிவுகளை விட்டுச் சென்றவர்கள்.

அன்று சார்வே எம் சிறு குருமட அதிபரான காலகட் டம், யேசுவையே கண்ட, 'வந்துபாருங்கள்' என அவ ரால் அழைக்கப்பட்ட,சீநாய ரின் முதற்சீடர் போன்று 'அவர்களும் அவருடன் தங் கினர்' என்ற எளிமை நிறை மூன்று வார்த்தைகள் நிறை வாகின, நாங்கள் சார்வேயு டன் விடுமுறை நாள்களை கழிக்க தங்கியிருந்த காட்டுப் புற கிராமப்பங்குக் கோயில் களில் நண்பரைச் சந்திப் பதற்கு கரோவ் வருவார், எம்மோடு ஒன்ற விடுவார்.

முன்னையஐரோப்பிய மிஷ னரிகளை விட வித்தியாசமா கவே இவர்கள் மக்களை அணுகி நெருங்கிப்பழகினர். வட்டக்கச்சியில் அவரது சிவந்த தாடியில் காட்டு மின்மினிப் பூச்சிகளை பிடித்து விட்டு அலங்கார வெளிச்சங்களைப் பூட்டி மகிழ்வுற்றபோதும், புனித பத்திரிசியார் கல்லூரியில் உதைபந்தாட்டமாடிய போதும் இவ்வுண்மை தெரிந்தது.

சார்வேயின் முகமே யேசு பிரானின் முகமாக எம் உள் ளத்தில் பதிந்து 'கிறிஸ்து வின் அன்பு என்னை உந்தித் தள்ளுகிறது' என்ற வாக்கை மெய்யாக்கிறது.

சுருக்குக் கயிறு

ஆயர் எமிலின் காலத்தி லேயே கத்தோலிக்கா யாழ் வின் கழுத்துப்போல ...

(4 ஆம் பக்கம் பார்க்க)



யூஜின் டி மசனட்
நிறுவுனர்



அமலமரித்தியாகிகளின் உயர் தலைவர் பேரருட்திரு மார் சலோ சாகோ அ. ம. தி அவர்கள், தமது சபையினர் இம்மண்ணில் காலபதித்த 150 ஆண்டுகளின் நிறைவாக உரோமை நகரிலிருந்து யாழ்ப் பாணம் வந்து இன்றைய நிகழ்ச்சியில் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொள்கி றார்.

## அமலமரித் தியாகிகளின் கல்விப் பணி

''உலகிருளை ஊடுருவிச் சென்று இறையொளியில் உறவுகொள்வதே துறவு, இனம், மொழி, நிறம் என்ற பல வண்ணங்களையும் கலந்து மனம் விரும்பும் புனிதமானஒரு நிறத்தை உரு வாக்குவதே துறவு'' என்ற மணிமொழிகளின் ஒளி வடி வங்களாகத் திகழ்ந்து அமல மரித்தியாகிகள் இலங்கையை இலங்கவைத்த திருப்பணிகள் அனந்தம், அவற்றுள் அவர் களது கல்விப் பணிகளோ சாதனையின் கொடுமுடியில் நிலைபெற்றுள்ளன.

மனிதனைப் பூரணனாக் கும் சாதனம் கல்வி. அதன் பெரும்பயன் கடவுட்பணி என்பதை உணர்ந்து, உடல் உளப் பண்புகளின் வளர்ச்சி யைக் குறிக்கோளாய்க் கொண்டு கத்தோலிக்க சமய அடிப்படையிலான கல்விக்கு வித்திட்டு இலங்கை மக்கள் இம்மைமறுமைப் பேறடை யத் தம்மை அர்ப்பணித்த பெருமை அமலமரித்தியாகி களுக்கே உரிமை.

முழுமனத்தையும், முழு ஆற்றலையும், முழு அறிவை யும் ஓரிடத்திலே செலுத்தி முழு வெற்றிகண்ட ஆயர் களாக சினியோ பெற்றகினி, ஜோன் ஸ்ரீபன் செமறியோ, இலங்கையின் இரண்டாவது அப்போஸ்தலரெனப்படும் பேரருள் திரு. கிறிஸ்தோப் பர் பொஞ்சின், அன்றா மெலிசன் முதலானோர், கத்தோலிக்க திருச்சபையின் கல்வி வரலாற்றில் அபிவிருத் தியின் பேரிலக்கியங்களா கப் பொன் எழுத்துக்களிற் பொறிக்கப்பட்டுள்ளனர்.

1848 ஆம்ஆண்டு இலங்கை யின் அ. ம. தியாகிகளின் சேவை காக்கோளாயிற்று. அன்று கல்வி நிலையில் கத் தோலிக்கர்கள் ஏணியின் அடித்தளத்தில் நின்றனர். வறுமையிலும், ஒருங்கிணைக் கப்படாத தனிமையிலும் கூட் டுறவு வாழ்விற் பயிற்சி பெறாத மடைமையிலும் தளர்ந்திருந்தனர். அன்றைய ஆட்சியாளர் குறிப்பிட்ட சில மதத்தினருக்கு வழங்கிய சலு கைகளையும்இழந்திருந்தனர். ஆதரவற்று, நியாயமான கோரிக்கைகளுக்கு அருகதை யற்று, ஏளனத்துக்குரியவர் களாக அல்லற்பட்டனர். ஆங்கிலக்கல்விக்கு தனி மதிப்பு நிலவிய அக்காலத் தில், கத்தோலிக்க பிள்ளை களிற் பெரும்பான்மையினர், ஆங்கிலக்கல்வி அறிவைப் பெறப் புரட்டஸ்தாந்து பாட சாலைகளை அணுகினர். அ.ம. தியாகிகள் இந்த அவல நிலைக்குப் பரிகாரம் தேடக் கத்தோலிக்க பிள்ளைகளுக் கெனத் தனிப்பட்ட கல்லூரி களை நிறுவமுயன்றனர். பரிகாசப் பேச்சுக்கள் தலை காட்டின.சமயதாகம் சமுதா யத் தொண்டாக மலர்ந் தது.

1850 ஆம் ஆண்டு ''ஆண் கள் செமினறி'' என்ற பெய ருடன் ''புனித பத்திரிசியார் கல்லூரி'' எழுந்தது. ''பெண் கள் செமினறி'' என்ற நாமத் துடன் ''திருக்குடும்பக் கன் னியர் மடம்'' பிறந்தது. யாழ். நகரில் ஆங்கிலக் கலா சாலைகள் இரண்டு ஆயர் பெற்றக்கினி ஆண்டகையால் நிறுவப்பட்டன. தொடர்ந்து



மறையுணர்வும், கிறிஸ்தவ விழுமியங்களும் நிறைவுறச் செய்யும் நோக்குடன் ஆசிரி யத் தகைமை சான்ற ஐரோப் பியக் குருக்கள் வரவழைக்கப் பட்டனர். துரிதமான இவ் வளர்ச்சிப் பணி 1960 வரை நீடித்தது.

அளவற்ற தியாகம், தளர் வற்ற நெஞ்சுறுதி, அயர்வற்ற விடாமுயற்சி, அகன்ற தீர்க்க தரிசனச் செயற்பாடுகளுடன் அ. ம. தியாகிகள் வளர்த்த கலைச் சேவைப்பயிர் தழைத் தோங்கியது. இலங்கை ஆயர் கள், குருக்கள், ஆதரவாள ரின் பங்கேற்பு, ஒத்துழைப்பு என்பன அருங்கொடைப் பெரு கின. பொதுநிலையினரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
(52696)

இறைச்சிக் கோழிகள் (புறோயிலர் அல்ல) விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்கப்படும். தொடர்பு கொள்ளவும்: கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(52664)

1½ மாதம் நிரம்பிய அல்ஷேசன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இரி,மே/பா தி. விஜயநாதன், உடுவில்றோட், மானிப்பாய்.
(52687)

7 SRI 404 கார் நல்ல நிலையில், HONDA 50cc SUPERCUB SELF - START மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: யோ. எட்டேன், 19/3, கொழும்புதம் வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக)
(52690)

### உடன் விற்பனைக்கு

பிறிமா பிறவுண் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 50 மட்டுமே 1½ மாதம் வளர்ச்சியடைந்த பிறிமா பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும்விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
[52667]

ஜேர்மன் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட டாஸ் கவுண்ட் நாய்க்குட்டிகள் (ஆண், பெண் 2மாதம் நிரம்பிய) விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்
[52668]

### சிற்றுண்டிச்சாலை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மாணவர்களின் நலன் கருதி சிற்றுண்டிச் சாலை ஒன்றை பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் திறந்துள்ளது.

### தவறிவிட்டது

யாழ். நகரில் மகாலட்சுமி ஸ்ரோஸிற்கும் ஆரியகுளம் ரயில் நிலைய லேனுக்கும் இடையில் பெண்கள் கைச் சங்கிலி ஒன்று வெள்ளிக் கிழமை (16 - 01 - 98) நண்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்லூர் ஆனந்தா கபேயில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(52693)

### கல்வி

G. C. E (O/L) மாணவர்கள் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெறவும் ஏனையோர் ஸ்போக்கன் இங்கிலிஷ் திறம்படக் கதைக்கவும் தபால் மூலம் பயிற்றப்படுகிறது. சுய விலாசம் இட்டு முத்திரை ஒட்டிய நீளதபாலுறையுடன் எழுதவும். M. J. Joseph, 76, Maha veethiya (Grand street), Negombo.
(52224)

### இறைச்சிக்கோழி

புறோயிலர் (Broiler) இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். தொடர்பு:- இல. 101, பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(52686)

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[52664]

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தினந்தோறும் கிடைக்கும். தொடர்பு:- Lucky Farm Sales Conter, PalalyRead, Thirunelvely
(52672)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 68, பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(52700)

### கோழி மருந்து

18-01-98 ஞாயிற்றுக் கிழமை 11மணிக்கு கம்றோ, ரணிக்கெற் மருந்துகள் வழங்கப்படும். தேவையானோர் வந்து பெற்றுக் கொள்ளவும். ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
[52666]

### தேவை

இருவர் உள்ள குடும்பத்தை கவனித்து உதவி செய்ய 50 வயதுக்கு உட்பட்ட பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசலாம். தங்கரெத்தினம், 15/2, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
(52692)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? தொழில் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? காரியம் கைகூடுமா? உங்கள் பிரச்சினைகளுக்கு உரிய விடையை உடனே பெறலாம். ஜாதகம், எண் விஞ்ஞானம், கைரேகை அனைத்துக்கும் தொடர்பு கொள்ளவும்: த. சிவானந்தன், பிரபல சோதிடர் 250, பலாலி வீதி, கந்தர்மடம்.
(52676)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்!

வேலணை
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(52417)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு
நடத்தும்
## பண்ணிசைப் போட்டி - 1998

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கீழ்ப் பிரிவு மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் மொத்தம் 06 பிரிவுகளைக் கொண்டதாக மேற்படி போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் இப்போட்டி நடத்தப்பட்டு இறுதிப்போட்டி 21 - 02 - 98 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பண்ணிசைப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்தும், யாழ். மாநகர சபை, நல்லூர் அலுவலகத்திலிருந்தும் ரூபா 20 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி **31 - 01 - 98** ஆகும்.

மாணவப்பருவத்தை சைவசமய சூழலுக்கு உட்படுத்தி சமூகத்தில் இறையுணர்வுள்ள நல்ல பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டியில் பண்ணிசை பயிலும் அனைவரும் தவறாது பங்குபற்றிப் பயன் பெறுவீராக.

மேலதிக விவரங்களுக்காக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
(சி-2660)

## கண்ணீர் அஞ்சலி

### இரத்தினசாமி பஞ்சாட்சர ஐயர்


கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி
விநாயகர் ஆலய முன்னாள் பூசகர்

அவர்கள் **14 - 01 - 1998** அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
வழிபடுவோர் சங்கம்,
கோண்டாவில் வாழ் விநாயக அடியார்கள்.
(சி/2662)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்: 01 — 12 — 1959



மறைவு: 19 — 12 — 1997

### ஜெயபாலசிங்கம் ஜெயகுமார்

(பிரதிப்பிரதம பொறியியலாளர்
கட்டடத் திணைக்களம், வடபிராந்தியம்)

நேர்மையுடனும், தியாக சிந்தனையுடனும் கடமையே கண்ணாக அயராது உழைத்திட்ட அமரர் ஜெயக்குமார் அவர்களே!

உமது குழந்தை உள்ளமும், குறும்புத்தனமான செய்கைகளும், நாம் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாது எம்மோடு இணைந்து பல வருடங்களாக செயலாற்றி எமக்கும், எமது திணைக்களத்திற்கும், எமது இனத்துக்கும் பெருமைகள் தேடித் தந்தீர்களே!

உமது செயலாற்றலின் திறமையினால் மேன் மேலும் எமக்கு பெருமைகள் தேடி வரும் என்ற இறுமாப்புடன் இருந்த எம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு சென்றுவிட்டீரே!

நீர் எம்மை இடைவழியில் விட்டுவிட்டுச்சென்றுள்ளீர் என்பதனை எம் இதயம் இன்னும் தான் ஏற்கவில்லை. எப்படித்தான் உமது உற்றார் ஏற்றாரோ என்று நாம் ஏங்குகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
யாழ். கட்டடத் திணைக்கள
பிரதம பொறியியலாளரும்,
இணைந்த ஊழியர்களும்.
(52677)


# BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

## லாவின்

★ மிளகாய் ★ கௌபி ★ போஞ்சி போன்ற பயிர்களில்
காய்துளை புழுக்களைக் கட்டுப்படுத்த
சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசனி.
பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி புழுக்களைத்
தாக்கும் தன்மை குறைவானது.

புத்தம் புதிய
**பின்கெம் லாவின் பி. எ. எஸ். எ(F)வ்**
**நிறுவனத்தினால்**
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

FINCHEM AGRO DIVISION

**உழவர் களஞ்சியம்**
பலாலி வீதி, திருநெல்வேலி
**கமக்காரர் மாளிகை**
பிரதான வீதி, சுன்னாகம்.
**BASF- Finlay(Pvt.)Ltd.,**
186, Vauxhall Street, Colombo - 2.
(பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள்)
(சி/2649)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன்

பருத்தித்துறை தம்பசெட்டியைச் சேர்ந்தவரும் தம்பசெட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவராகவும், ஆலடிப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபையின் உறுப்பினராகவுமிருந்து பணிகள் பல புரிந்து இவ்விரு ஆலயங்களின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி உதவிகள் பல புரிந்தவருமான

### திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன்

அவர்கள் 09 - 01 - 1998 அன்று கொழும்பில் அமரரான செய்தி கேள்வியுற்று பெருந்துயரடைகின்றோம். துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய மாயக்கை விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**மாயக்கைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபையினர்.**


(52647)


# தன்னலமற்ற சேவை உணர்வே 'ஆத்மஜோதி' ஐயாவின் சிறப்பு

**சைவப் பெரியார் 'ஆத்மஜோதி' முத்தையா அவர்களின் நினைவாகஞாபகார்த்த மலர் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை வெளியிடப்படுகிறது.**

ஆத்ம ஜோதி என்றால் அது முத்தையா மாஸ்ரர் என நம் நாட்டவரும் தமிழ் கூறும் உலகும் உணரும் வகையில் வாழ்ந்து காட்டிய சிலராவார். இந்து மத சாரமான சன்மார்க்கத்தையே தன் உயிராகக் கொண்டு தன்னலமற்ற சேவையை உணர்வில் கலந்து தொண்டாற்றிய பெருந்தகையாவர். இவ்வுலக வாழ்வின் கோலத்தை உணர்த்தும் வகையில் ஆன்மீகத் தாகத்திற்கு அருபருந்தளிக்க முனைந்த பெரியாராவர்.

ஆத்மஜோதி அவர்கள் எமது மண்ணில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சைவத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிய தொண்டு மகத்தானது. பிரமச்சாரியத்தைச் சார்ந்து நடந்து நடந்து உரமேறிய உடம்பு. வெள்ளை உடையில் பொலிந்து தோன்றும் நெடிய உருவம் புன்னகை பூர்த்த முகப்பொலிவு. கண்டாரை ஈர்க்கும் வசீகரத் தோற்றம். இத்தனை இலட்சணங்களைக் கொண்டவர் தான் ஆத்மஜோதி முத்தையா ஐயா அவர்கள். இவர் தொண்டுக்குள் மறைந்திருந்து தொண்டு செய்தவர். அதாவது உலகம் தோன்றிய பல நாள் முதல் உணவுக்கு ருசி சேர்த்து வருவது உப்பு ஆகும். தனக்கு வரும் புகழைத் தான் சேரும் கறிவகைகளுக்கு கொடுத்துவிடும் உப்புப் போன்று தொண்டு வாழ்க்கையில் ஈடுபட்ட அமரர் அவர்கள் தொண்டுக்குள் மறைந்திருந்து தொண்டாற்றியவர் என்றால் மிகையாகாது.



இளமைப்பருவத்திலிருந்தே பெற்றோருடன் இறைபக்தியில் தம்மை ஆழ்த்திய ஆத்மஜோதி சைவத்தையும், தமிழையும் மலையக மக்களுக்கு அளிக்கவேண்டுமென்ற அவாவினால் உந்தப்பட்டு நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றூடாகத் தமது பணியைத் தொடர்ந்தார். 1948 ஆம் ஆண்டு சைவப் பெரியார் திரு. க. இராமச்சந்திராவுடன் இணைந்து ஆத்மஜோதி என்ற சஞ்சிகையின் மூலமாகச் சமயப்பணியை மேற்கொள்ளலானார்.

இளவயதிலிருந்தே தனது பிறந்த இடத்தில் உள்ள ஞானவைரவர் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து வந்த முத்தையா அவர்கள் புராணபடனம், சமயச் சொற்பொழிவு ஆகியவற்றில் கூடிய ஈடுபாடு இருந்தபோதிலும் அவர் அடியார் புடைசூழக் கூட்டுப்பிரார்த்தனை செய்வதில் பெருவிருப்புக் கொண்டவர். காலப்போக்கில் பாதயாத்திரை செய்து மக்களுக்கு சைவசமயத்தின் தொன்மையை உணர்த்தியவர்.

முத்தையா அவர்கள் ஆத்மஜோதி மாதாந்த சஞ்சிகையின் மூலம் தத்துவக் கட்டுரைகள், கதைகள், சமயப் பெரியார்களின் சிந்தனைகளைச் சைவ மக்களுக்கு மட்டுமல்லாது சகல மதத்தினருக்கும் எடுத்துத்தந்தவராவர்.

உலகிலுள்ள பல்வேறு சமயப் பெரியார்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த ஆத்மஜோதி அவர்கள் உலக இந்து சமய மகாநாடுகளுக்கு இலங்கையின் பேராளராக சென்றமை மட்டுமல்லாது வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு குறிப்பாக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளிலுள்ள இந்துக்களுக்கு பயன்படத்தக்க வகையில் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியவர். குறிப்பாக இந்தோனேசியாவில் பாலித்தீவில் சைவசமயம்காலத்தால் அள்ளப்படாதிருப்பதற்காக அங்குள்ள சைவர்களுக்குச் சமய உணர்வினை ஊட்டவும் இரண்டாண்டுகள் அங்கு தமது சமயப் பணியைத் தொடர்ந்தவர்.

1980 களிலிருந்து இலங்கையில் நிலவும் அரசியல் காரணங்களின் நிமித்தம் மேற்குலகநாடுகளுக்குச் சென்றடைந்த எமது சமூகத்தினர் தாம் சார்ந்த சமயத்தை மறந்திடாமல் இருக்கும் பொருட்டும் சுவிற்சலாந்து, கனடா போன்ற நாடுகளில் சமயச் சொற்பொழிவுகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன் தாம் பிறந்து வளர்ந்த இடத்தின் வரலாறு உட்பட பல்வேறு நூல்களை ஆக்கித் தந்த பெரியார் ஆவார். இனக்கலவரங்களினால் மனமுடைந்து தான் பணிசெய்த மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து இங்கும் சமயப்பணியாற்றுவதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இருந்த போதிலும் சமயப் பணியினை மேற்கொண்டு வந்த வேளை மலையகப்பகுதியை என்றும் மறந்திலர்.

ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சாவகச்சேரியிலிருந்து தமது சமயப் பணியினை அமைதியாகச் செய்து வருங்கால் இப்பிரதேசம் கொடிய யுத்தத்தினால் சீரழிந்து சைவத்திற்கு பெரும் சவால்களை எதிர்நோக்கிய காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த சைவசமயிகள் ஐயா அவர்களின் தலைமையை ஏற்றுச் செயற்பட தயாராகினர். எனவே துணிந்த மனத்தினரான ஆத்மஜோதி அவர்கள் எந்தச் சவாலையும் தாங்கி கொள்வேன் எனத் தன்னுள் வரித்துக்கொண்டு ஓர் அமைப்பை நிறுவ முயற்சி செய்தார். அவரினால் படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் இறுதிவடிவம் தான் 'இந்து சமயப் பேரவை' யாகும்.

இப்பேரவையை எமது பிரதேசத்தில் மட்டுமல்லாது எமது மக்கள் வாழும் சர்வதேச நாடுகளிலும் அமைப்பதில் வெற்றி கண்டார். குறிப்பாக சுவிற்சலாந்து, கனடா நாடுகளில் இப் பேரவையின் கிளைகள் அமைக்கப்பட்டு

(9 ஆம் பக்கம் பார்க்க)


நவநாகரிக பட்டு பருத்திப்புடைவைகள்
றெடிமேட் ஆடை வகைகள்
கோயில் தேவைகளுக்குரிய

O பட்டுக்குடை O கொடி O ஆலவட்டம்
O வாகுமால் O மகரதோரணம்
O வெண்சாமரம் O வலம்புரிச்சங்கு

என்பவற்றுக்கு

## அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரியகடை, யாழ்ப்பாணம்

(52702)


வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை
(மல்லாகம்)

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 27 - 01 - 98 நண்பகல் 12 மணிவரை ரூபா 100,000க்கு மேல் அரசாங்கதிணைக்களங்களில் அல்லது உள்ளூராட்சி சபைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்தும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பலநோக்குகூட்டுறவுச்சங்கள் ஆகியவற்றிலிருந்தும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்களை தலைமைப்பணிமனையில் 26 - 01 - 98 நண்பகல் 12-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் ரூபா 150 ம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 1,000/ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 27 - 01 - 98 பிற்பகல் 2-00 மணிக்கு திறக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் சீல் செய்யப்பட்டு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது இச்சபையின் கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கப்பெறும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

### வேலையின் விவரம்

1. சிறுவர் பூங்கா விளையாட்டு உபகரணம் செய்து வழங்கலும் எல்லை வேலி அமைப்பும்
2. பொது நூலக கட்டடம் திருத்தம்
3. மல்லாகம் உப அலுவலககட்டம், களஞ்சியம் திருத்தம்
4. குட்டியப்புலம் கோணாவளை வீதி திருத்தம்
5. அலுக்கை வீதி, திருத்தம்
6. பத்தாவத்தை ஆலடி வீதி திருத்தம்.

நா. வேதநாயகன்
விசேட ஆணையாளர்,
வலி. வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

வலி. வடக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
யாழ். வீதி, மல்லாகம்.
13 - 01 - 1998

(சி-2668)


உள்ளத்தாலும் உணர்வாலும் - உண்மையுடனும் உறுதியுடனும்
உங்களுடன் உங்களுக்காகவே

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

விளம்பர இல. (47656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் மகப்பேற்று பிரிவை புனரமைக்கவென நிதி ஒதுக்கீடு

உரும்பராய் ஜன.18 கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவைப் புனரமைத்து விஸ்தரிப்புச் செய்யவும், புதிய படுக்கைகள் வாங்கவும் கோப்பாய் பிரதேசச் செயலர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு இப் பிரதேசச் செயலர் பிரிவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து சுமார் 2 லட்சத்து 75 ரூபா வரையில் இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குச் செலவழிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்திலுள்ள முக்கிய வைத்தியசாலை இதுவாகும். இந்த மகப்பேற்றுப் பிரிவைப் புனரமைத்து விஸ்தரிப்பதன் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஏற்படும் இட நெருக்கடியைக் குறைக்க முடியும். கர்ப்பிணிகள் அவசரமான நேரத்தில் நீண்ட தூரம் பயணம் செய்வதனையும் தவிர்க்க முடியும்.

(ஐ-154)


## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

(வ/து) பருத்தித்துறை

பதவி வெற்றிடங்கள்

1. எழுதுனர் 302:16
11. கிளை முகாமையாளர் 208:16

மேற் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 26 - 01 - 98

பொது முகாமையாளர்

(இ/2667)



## தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு கீழ்க் காணப்படும் கல்வித்தகைமையுடையவர்கள் தேவை.

[1] Bill Clerk (பில்கிளாக்) (ஆண்)
[2] Stock Clerk (ஸ்ரொக்கிளாக்) (பெண்)

கல்வித்தகைமை:- G, C. E A/L இல் கணக்கியல், வர்த்தக பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

சம்பளம்:- நேரில் பேசிக் கொள்ளலாம்.

22 - 01 - 98 ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல. 678, மே/பா உதயன்

(52643)


## வாகன அனுமதிப்பத்திரம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 1998 ஆம் வருடத்திற்கான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இத்தகவலை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

[ஐ 135]

## கிராமியவங்கி மீண்டும் திறப்பு

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மாதகல் கிராமிய வங்கி ஆறு வருட காலஇடை வெளிக்குப் பின்னர் மீண்டும் கடந்த வருடம் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

(ஐ 135 5)

## இறை தடாகத்தின்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

சங்ககாலக் காவியங்கள், இலக்கியம், செய்யுள்களிலெல்லாம் தாமரையின் தனிச்சிறப்பு தேமதுரத் தமிழினால் சுவையுற ஓதப்படுகின்றது. கம்பன், கபிலர், ஔவையார், வள்ளுவன், இளங்கோ, புகழேந்தி, காளமேகம் போன்ற காப்பியப் புலவர்களெல்லாம் தாமரையை பல வர்ணனை, உவமைகளுடன் சேர்த்து இயம்பினர். வாழையடிவாழையாக எல்லா மதங்களுமே தாமரையை ஒரு புனிதமுறும் மலராகவும், முதன்மையுறும் பொருளாகவும் மதித்துப் போற்றுகின்றன.

கலைமகளின் கொலுவாக இந்துமதமும், இந்து மதம் உட்பட அனைத்து மதங்களும் தம் குல தெய்வங்களின் வதனங்களுக்கும், நயனங்களுக்கும், இதயங்களுக்கும், திருவடிகளுக்கும் ஒப்பிடுகின்றன.

இதன் எழிலழகை அழகின், அமைதியின், பொறுமையின், தூய்மையின் விம்பமாகவும், கருவியாகவும் கருதியும் மெய்மையின் கோயமாகவும் மதிக்கப்படுகிறது.

தாமரை மலரானது தண்ணீர் உயர, உயரத் தானும் உயர்கின்றது. தாமரையின் உயர்வைத் தண்ணீர் உயர்த்துவதைப் போன்று மனிதனின் உயர்வை நல்ல உள்ளமும், நல்ல குணமும் நல்ல செயல்களும் உயர்த்துவதனால் தாமரையைப் போலப் புகழடைகின்றான்.

கோயிலின் உயர்வைக் கோபுரம் காட்டுகின்றது. உள்ளத்தின் உயர்வை நல்ல செயல்கள் வெளிப்படுத்துகின்றன. இதனால் மனித நேயம், நேசம் என்பன ஆல் போல் வேரூன்றி உயர்ந்து அகிலம் எல்லாம் பரந்து செழிக்கின்றன.

கிறிஸ்துநாதருடைய நிறை வாழ்வில் மூழ்கி அதில் நிலை பெறுபவனே உண்மைக் கிறிஸ்தவனாவான். அயலானை அன்பு செய்தல், கிறிஸ்துவின் ஆழமான ஆணித்தரமான வலியுறுத்து அவரின் வாக்கின்படி ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலை ஒத்த தேவ புதல்வனாகின்றான். தனது அயலானின் தூய வாழ்விற்கும், தனது தூய வாழ்விற்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பொறுப்பாளியாகின்றான்.

இந்த விதத்தில் நமது பேதங்கள், குரோதங்களைக் களை எடுப்பது எமது தலையாய கடமையாகும். நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற மட்டில் மன்னிப்பு, அன்பு, சகோதரத்துவம், சமரசம் ஆகிய நெறிகளை வளர்த்து எம்மோடு அடிக்கடி பேசும் தேவனின் திருவாய் மலர்வாகிய நற்செய்தியின் நற்சான்றிதழ்களாவோம். நமது சேவையும், வாழ்வும் இறை ஒன்றிப்பிற்காகவே என்பதை சிரமேற் கொண்டு மலரினத்தில் மதிப்புறும் தாமரையாய் மனிதத்துவத்தில் உயர்ந்து, நித்தியம் இறையுறவில் முக்தி எய்துவோம். இறை தடாகத்திலே செந்தாமரை இதழ்களாக மிளிரத் தக்கதாக எமது வாழ்க்கையை அமைக்க அக்கறை கொள்வோமாக.

—உடுவில்

தே. ச. வில்சன்


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் தை மாதம் 6 ஆம் திகதி [19-01-1998] திங்கட்கிழமை காலை 10.45 மணி முதல் 11.30 மணி வரையுள்ள மீனலக்கின சுப முகூர்த்தத்தில்

எமது ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
பாலேந்திரா
[பாலு]
அவர்கட்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
சியாமளா
[சியா]
அவர்கட்கும்

நெடியகாட்டுப் பிள்ளையார் திருவருளுடன் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு ச. இரத்தினவேல்
(இளைப்பாறிய தபால் சேவகர்)
திருமதி இ. கமலாதேவி
'விஷ்ணுசுந்தரம்' மாளிகை,
யாழ்வீதி,
வல்வெட்டித்துறை.

திரு. இ. தர்மலிங்கம்
(உதவி தொழில் ஆணையாளர்)
திருமதி த. செல்வராணி
''ஸ்ரீகலா'' இல்லம்,
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

[இருவீட்டார் அழைப்பு]

[52613]



## ஓராண்டு நினைவலைகள்



திருமதி பரமேஸ்வரி காசிநாதன்

தோற்றம்: 05 — 01 — 1933

மறைவு: 29 — 01 — 1997

குடும்பபாரம் கையெடுத்து கடுமுழைப்பால்
கரைந்து விட்ட கற்பூரம் நீயம்மா
நாடுபோற்ற அன்பை நம் மீது இறைத்து
நாளும் அரவணைத்து நாடி வளர்த்தாயே!
பாடுபட்டபலன் பாரில் சுவைக்கு முன்னே
கூடுவிட்டு நீ சுவர்க்கத்தில் கூடியதேன்?
வீடு விளங்க அம்மா வீற்றிருந்த அந்நினைவு
விட்டகலாதென்றும் விம்முதே நெஞ்சுகள்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

[52698]



சாம்பல் பூத்த மண்ணில்
சமாதானம் பூப்பதற்கே நாங்கள்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

[ச-0019]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திகதி மோதல்

இனப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கென அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ள தீர்வு யோசனை — தீர்வுத் திட்டம் குறித்து அரச தரப்புக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான இழுபறி இன்னும் தீர்ந்த பாடில்லை.

ஏனைய சில கட்சிகள் சமர்ப்பித்தது போலத் தாமும் பிரஸ்தாப தீர்வு யோசனைக்குச் சில திருத்தங்களை மாற்று யோசனையாக முன்வைக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது. அதற்கு அரசு இணக்கம் தெரிவித்தது.

ஆனால் ஐ. தே. கட்சியின் உத்தேச திருத்தங்களை எப்போது சமர்ப்பிக்கவேண்டும் என்பதில் ஒரு வகை "திகதி மோதல்" நடைபெற்று வருகிறது; முடிவின்றித் தொடர்கிறது.

ஆரம்பித்தது இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஐ. தே. கவின் திருத்தங்கள் உத்தியோகபூர்வமாகத் தமக்குக் கிடைக்கவேண்டும் என்றும் —

அவ்வாறு கிடைக்கவில்லையெனில் அரசு தனது சொந்த வழியில் செல்வது குறித்து ஆராய்ந்து செயற்படும் என்றும் — அரசமைப்பு அமைச்சர் பீரிஸ் கூறியிருந்தார்.

ஆனால் அரசு தமக்கு அப்படி ஓர் அவகாசம் விதிக்க முடியாது என்றும் அது குறித்துத் தாம் அலட்டிக் கொள்ளவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பதிலடி கொடுத்திருந்தார்.

அனேகமாக பெப்ரவரி முதல் வாரத்தின் பின்னரே தமது திருத்தத்தை — மாற்று யோசனையை — சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் சமிக்ஞை காட்டியிருந்தார்.

இவ்வாறு அமைச்சர் பீரிஸும் அரசும், ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியும், கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது முன்னுரிமைப் பணியாகும். அது தீர்க்கப்படாததால் நாடு அழிந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் அரசாங்கம் மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியும் இது விடயத்தில் விரைவாகச் செயற்படவேண்டும். இன்றைய படுமோசமான நிலையை உருவாக்கியதில் ஐ.தே.கவுக்கும் அதிக பங்குண்டு என்பதனை மறந்துவிடலாகாது.

அரசாங்கம் இப்போது அவசரம் காட்டுவது போல, இனப் பிரச்சினைத்தீர்வை உறுதியுடன் முன்னெடுப்பதற்குத் தான் பதவிக்கு வந்த கையோடு ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருட காலத்திற்குள் விரைந்து செயற்பட்டிருக்க வேண்டும்.

அப்போது இது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டிருந்தால் இப்போதைய கடைசி நேர அவசரம்தேவைப்பட்டிருக்காது. தீர்வை நிறைவேற்றுவதில் இப்போது தோன்றியுள்ள தடைகளும், தடங்கல்களும் உருவாகி இருக்கமாட்டா.

இம்மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் அரசு தீர்வு யோசனைகள் தொடர்பான எதிர்காலத் திட்ட இலக்குகளைத் தமாகிக்கும் என்று அமைச்சர் பீரிஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தீர்வு யோசனைகளான மாற்றுத் திட்டம்குறித்து எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ஐ. தே. க. கூடி ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மாத முடிவுக்குள் அது இறுதி வடிவம் பெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனினும் சுதந்திரப் பொன் விழாவன்று ஜனாதிபதி தீர்வு யோசனை சம்பந்தமான தமது எதிர்கால நடவடிக்கை என்ன என்பதனை வெளிப்படுத்துவார் என்று நம்பப்படுகிறது.

அப்போது அரசு — ஐ. தே. க. கயிறிழுப்பு திகதி மோதல் என்னாகும் என்பது அனேகமாகத் தெரியவந்துவிடும்.

# இடைநிலை மருத்துவ சேவை

# நேர்முகப் பரீட்சை வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஜன. 18

இடைநிலை மருத்துவ சேவைக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்குத் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்குத் தேவையான அனைத்துச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரம் வருமாறு:-

### பொது சுகாதாரப் பரிசோதகர்

கே. தயானந் — (பருத்தித்துறை), கே.யி.கே.கே. பாலசிங்கம் — (கரவெட்டி), எஸ். பிரபாகரன் — (சங்கானை), எ. ஜெயபாலன் — (நாவற்குழி, கைதடி), எஸ். ஜெனரிபாலன் — (பரந்தன்), கே. இந்திரராஜா — (கைதடி), எஸ் மதிவாணன் — (கரணவாய், கரவெட்டி), என். நிர்மலண்டம் — (தொண்டமனாறு), எல். கெங்காதரன்— (நுணாவில்,சாவகச்சேரி),வி. பிரகலாதன் — (கரவெட்டி), பியோகராசா—(கரணவாய், கரவெட்டி), ராயூரம்—(வல்வெட்டித்துறை), வி. மகாமூர்த்தி — (வவுனியா), கே. பரதசிவம் — (குமுழமுனை, முள்ளியவளை), கே. செயோன் — (மீசாலை, கொடிகாமம்), ஆர். கமலகமணன் — (கிளிநொச்சி), பி. சத்திகுமார் — (வவுனியா), என். சுகிர்தலிங்கம் — (கைதடி).

### ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்

செல்வி ஆர். யமுனா — (மீசாலை), செல்வி ரி. ஜெசந்தி — (நல்லூர்), ஆர். கணேசானந்தன் — (இமையாணன், உடுப்பிட்டி), என். துசிகரன் — (மட்டுவில், சாவகச்சேரி), செல்வி வி. ஞானசக்தி — (மட்டுவில், சாவகச்சேரி), செல்வி எஸ். கலைமகள் — (சாவகச்சேரி), எஸ். உமாசங்கர் — (பருத்தித்துறை), செல்வி என். எ. பொன்கலன் — (சாவகச்சேரி), செல்வி பி. ஆனந்தி — (தெல்லிப்பளை), செல்வி ஆர். லேணிகா — (சாவகச்சேரி), செல்வி ரி.வான்மதி— (சுழிபுரம்), செல்வி எஸ்.ஆர். வி. விக்ரோறியா — (மந்துவில், கொடிகாமம்), வை. ஜெயகாந்த்— (சாவகச்சேரி), எ. தயாவரம் — (தெல்லிப்பழை). (ஐ-5)

# மெய்வன்மைப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜன. 18

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சிபெற்றோரைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்திய பரீட்சையின் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து இப்பரீட்சைக்கு தமிழ்மொழி மூலம் தோற்றிய நூறு பேரில் இருபது பேரும் ஆங்கில மொழி மூலம் தோற்றிய நான்கு பேரில் இருவரும் சித்தியடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களின் பெயர்களும் அவர்கள் பெற்ற புள்ளிகளும் வருமாறு:-

### தமிழ்மொழி மூலம்

ஜே எஸ் ஐயர் (74), ஈ. அருளம்பலம் (74), கே. கோவிந்தராஜா (72), ஆர். செல்வராஜா (72), யு. சிவநங்கை (71), பி. முருகவேள் (70), எம். சுரந்தினி (70), என். சஜிகா (70), பி. மதியழகன் (67), எஸ். இருமாறன் (67), பி. சிவசோதி (65), கே. குமாரசாமி (65), மேரி ரஞ்சிலி (65), எஸ். நந்தகுமாரி (65), வி. சுந்தரலிங்கம் (65), ஏ அமலேஸ்வரி (65), கே. தளாயினி (65), எம். பி. பனிஸ்டர் (65), கே. கணேசநாதன் (65), எஸ். பவானி (65).

### ஆங்கிலமொழி மூலம்

கே. யதுகுலசிங்கம் (73), என். வித்தியாதரன் (70).

இப்பரீட்சைக்கு கொழும்பிலிருந்து தோற்றிய 270பேரில் நூறு பேரும் (37 வீதம்), யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றிய 104 பேரில் 22 பேரும் (இருபது வீதம்), அநுராதபுரத்திலிருந்து தோற்றிய 104 பேரில் 17 பேருமாக (16 வீதம்) மொத்தம் 139 பேர் சித்தியடைந்துள்ளனர். இது பரீட்சைக்குத் தோற்றிய 448 பேரில் 28 சதவீதமாகும்.

இப்பரீட்சை டிசம்பர் 28 ஆம் திகதி நடைபெற்றது. பரீட்சார்த்திகள் அனைவருக்கும் முடிவுகள் இவ்வாரத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றியோருக்கான முடிவுகள், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரியவந்தது.

முதல் தடவையாக இம்முறை இப்பரீட்சை தமிழில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (உ)

# யாழ். கிரிக்கெட் அணிக்கு கொழும்பில் வரவேற்பு

கொழும்பு, ஜன. 18

நேற்று கொழும்பு சென்றடைந்த யாழ். மாவட்ட கிரிக்கெட் தெரிவுக்குழுவுக்கு இரத்மலானை விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் குழுவினர் இரத்மலானை விமான நிலையத்தை அடைந்ததும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உபாலி தர்மதாச மற்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைச் சேர்ந்த ஜயந்த பத்தவெல, மஹிந்த செனவிரத்ன, மங்கம் பெரேரா, அனுரா வீ சிங்க ஆகியோர் யாழ். மாவட்ட கிரிக்கெட் குழுத் தலைவர் எம். எஸ். தயாளனையும் ஏனையோரையும் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

அதன் பின்னர் யாழ். மாவட்டக் கிரிக்கெட் குழுவினர் விளையாட்டு அமைச்சின் கிரிக்கெட் ரெஸ்ட் அணிகள் தங்கும் விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன்னதாக இக் குழுவினர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட சமயம் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் அவர்களை வழி அனுப்பி வைத்தார்.

யாழ். கிரிக்கெட் குழுவினர் இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸநாயக்காவைச் சந்திக்க ஏற்பாடாகி உள்ளது.

அதன் பின்னர் அவர்கள் இன்று கொழும்பில் நடைபெறும் இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் இறுதி நாள் ஆட்டத்தைக் கண்டு களிப்பார்கள்.

நாளை திங்கட்கிழமை கொழும்பு என்.சி.சி. மைதானத்தில் அவர்கள் பயிற்சியில் ஈடுபடுவர்.

செவ்வாய்க்கிழமை அவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவார்கள். (இ)

## துன்னாலைமற்று...

(ஏழாம் பக்கத்தொடர்)

அங்கும் இங்கும் பயனளிக்கக் கூடிய வகையில் செயற்படஆவன செய்தவர் ஆத்மஜோதி அவர்கள்.

ஆத்மஜோதி அவர்கள் பிறந்த நாள் தொட்டு இறுதி வரை சைவத்துக்கும், தமிழுக்கும் அளப்பரிய சேவை செய்துள்ளார் என்பதை அவரது வாழ்க்கைப் பாதைச் சுவடுகள் எமக்குத் தெரிவிக்கின்றன. ஐயா அவர்கள் தமது வாழ்வின் பிற்பட்ட காலப்பகுதியில் தான் பிறந்த மண்ணுக்குச் சேவையாற்ற இந்து சமயப் பேரவையைத் தளமாக்கிக் கொண்டார்.

இலங்கையில் வாழும் இந்துக்களுக்கும் அநாதரவற்ற வைவச்சிறார்களுக்கும் நிதி பெற்றுக் கொள்ளவும் கடல் கடந்து சென்று எமது உடன் பிறவாச் சகோதரர்களுக்கு எமது சமயம் சார்ந்த அறிவையூட்டவும் சென்ற நிலையில் கனடாவில் ரொரென்ரோவில் இருதய நோயினால் அமரராகிய செய்தி இந்து சமயத்தவர்களை மட்டுமல்ல சகல மதத்தவர்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

- கலாநிதி கா. [illegible]

## நாளை

**தை 6**

திங்கட்கிழமை

திதி: ஷஷ்டி
முற்பகல் 8.26 வரை
நட்சத்திரம்: அத்தம்
முன்இரவு 9.08 வரை.
சுபநேரம்: 12 55 2.05
ராகுகாலம்: 8.05 9.35
(பகலுக்கும் இரவுக்கும் [illegible] நேரம்)

## சொற்சிலம்பம்: முடிவு தினம்

நேற்றைய சஞ்சீவியில் சொற்சிலம்பம் — இல. 33 புதிர்ப் போட்டியின் முடிவு திகதி 23-01-1998 ஆகும். தவறுதலாக16-01-1998என பிரசுரமாகியமைக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். சத்திரத்துச்சந்தி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பாலஸ்தாபனம் இன்று ஞாயிறு காலை 7 - 00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

சிவஞானகுருமணி சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இப்பாலஸ்தாபன விஞ்ஞாபனத்தில் சர்வ போதகராக சிவஸ்ரீ மகாதேவாக் குருக்கள் கலந்து கொள்வார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல் நடவடிக்கைகளின்போது இவ்வாலயம் சேதம் அடைந்தமை தெரிந்ததே. [இ-7]

★ ★ ★

யாழ்ப்பாணம் மத்தி பஸ் நிலையம் ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும்.

27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 108 அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் விசேட பூசையும் நடைபெற்று சுவாமி கிராம பிரதட்சணம் வீதியுலா காட்சியும் மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு வைரவர் சாந்தியும் இடம்பெறும். [இ-103]

★ ★ ★

ஏழாலை நால்வர் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சண்டேஸ்வரர் குருபூசையும் மடாலய ஸ்தாபகர்தினமும் இடம்பெறும்.

காலை 9மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கும் ஸ்ரீநடராஜ மூர்த்திக்கும், சண்டேஸ்வர மூர்த்திக்கும் அபிஷேக ஆராதனை நடைபெறும். (இ)

அராலிமேற்கு கொட்டைக்காடு நொச்சியம்பதி அருள்மிகு ஸ்ரீ மூத்த விநாயகர் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-50 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதமகுரு சிவாகம வித்யதிமஜோதி சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். (ஐ-30)

# ஆசிரியர் ஊக்குவிப்புப் பணம்

## மாகாண திருமுகம்

வவுனியா மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதற்குமான ஊக்குவிப்புப் பணம் 14 மாதங்களுக்கானது சென்ற வருடம் முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் மிகவும் பாதிப்படைந்த யாழ். மாவட்டத்துக்கு இன்னும் மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து வரவில்லை. ஆசிரியர் சங்கங்களோ மேற்படி யாழ். மாவட்ட எம். பி. மார்களோ இது பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை.

சம்பந்தப்பட்டோர் உடனடியாக மேற்படி பணத்தை அரசாங்கத்திடம் இருந்து பெற்று மாகாண சபை ஊடாக யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பினால் 12,000 ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள். உடனடியாகச் செய்யப்பட வேண்டியது இது. செய்வார்களா?

சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால் அரச ஊழியர்களுக்கு இல்லை. மேற்படி ஊக்குவிப்பு மட்டும் வழங்கப்படுகிறது. அதுவும் ஒழுங்காக வழங்கப்பட்டால் அரச ஊழியர்கள் பெரிதும் பயன்பெறுவர்.

அனைவரும் உரிய நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

- ஓர் ஆசிரியர் -

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட 30 பேரும் உறவினரிடம் கையளிப்பு

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட 30 பேர்களையும் ஈ. பி. டி. பி யினர் பொறுப்பேற்றனர்.

அவர்களைத் திருகோணமலையிலிருந்து அழைத்து வந்து யாழ்ப்பாணத்தில் உரிய இடங்களில் சேர்ப்பித்துள்ளதாக ஈ. பி. டி. பியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. [உ]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோ. இராஜலெட்சுமி அம்மா

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி சோ. இராஜலெட்சுமி அம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ச. சோமசுந்தர ஐயரின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் வதரிபீட விநாயகர் கோயில் அர்ச்சகர்) அன்பு மனைவியும், பிரம்மஸ்ரீ சோ. நடராஜ சர்மா (ஓய்வுபெற்ற லிகிதர், ஆட்பதிவுத் திணைக்களம், யாழ். கச்சேரி), திருமதி ச. நாகலெட்சுமி அம்மா, பிரம்மஸ்ரீ சோ. லோகேஸ்வர சர்மா (யாழ் கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் வதரிபீட விநாயகர் கோயில் அர்ச்சகர்), பிரம்மஸ்ரீ சோ. வரதராஜ சர்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ந. கமலாம்பாள், பிரம்மஸ்ரீ க. சண்முகரத்தின சர்மா (கோப்பாய், ஓய்வு பெற்ற ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி), திருமதி லோ. புவனேஸ்வரி, திருமதி வ. லோகேஸ்வரி ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-1-98) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் இல. 04, விபுலானந்தர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தண்டிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிரம்மஸ்ரீ சோ. லோகேஸ்வர சர்மா
(மகன்)
(52713)

### குமாரசாமிசெட்டியார் கதிர்காமத்தம்பி

பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி 15-01-98 இல் இறைபதம் எய்தினார்.

அன்னார் குமாரசாமிசெட்டியார் கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், பூலட்சுமியின் அன்புக் கணவரும், கதிர்காமசாமியின் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்) அன்புத் தமையனாரும், திருமதி கமலாசினி குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிவநாதன் (ராணி பேக்கரி), மற்றும் நாகபூஷணி, பாலச்சந்திரன் (மைலன் பேக்கரி), திருமதி தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினகோபால் (இளைப்பாறிய பிரதம லிகிதர், முகாமையாளர், பரமானந்தா ஆச்சிரமம், வதிரி), மனோன்மணி (இளைப்பாறிய ஆசிரியை, சிவப்பிரகாச வித்தியாலயம், தும்பளை), நாகேஸ்வரி, புஸ்பராணி, தியாகலிங்கம் (மணிவண்ணன் சிகரட் ஏஜென்சி, வடமராட்சி) ஆகியோரின் மாமனாரும், சேயோன் (நூலகப் பொறுப்பாளர், நெல்லியடி ம. ம. வித்தியாலயம்), மனோகரன், ஜனார்த்தனன், கீதாஞ்சலி, சிவசங்கர், சிவரசம், ஜெயராம், பிரசாத், தர்மினி, ரோகினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 235/1, வி. எம். றோட், பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேற்று முன்தினம் (16-1-98) சுப்பர்மடம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. பாலச்சந்திரன்
(மகன்)
235/1, வி. எம். வீதி,
பருத்தித்துறை.
(52707)

### வீரகத்தி இராசையா

(கூப்பன் கடை, ஆறுகால்மடம்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி இராசையா 17-01-98 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற வாரிப்பிள்ளையின் (பராசத்தி) அன்புக் கணவரும், சிவலிங்கம், வீரலட்சுமி, முத்துலிங்கம், நாகலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, கணபதிப்பிள்ளை, சுந்தரேஸ்வரி, நேசராஜா, செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசங்கர், கௌரிசங்கர், சிவகார்த்திகா, பத்மசங்கர், மாவலிவாணி, ஸ்கந்தமாவலி, தசறோஜினி, மஞ்சுளா, காலஞ்சென்றநிரஞ்சலா, ஜெயப்பிரகாஷ், ஜெயசுதன், ஜெயப்பிரதா, ஜெயகார்த்தீபன், சுகன்யா, சுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகரத்தினம், பொன்னையா, காலஞ்சென்றவர்களான ஞானத்துரை, கதிரவேலு, செல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (18-01-1998) ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10-00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
இ. முத்துலிங்கம்
(மகன்)
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(சி/2672)

---

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப்பணம்:

# சரியாகப் பயன்படுகிறதா என்பதை கிராம அலுவலர் கவனிக்கவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவாகும் பணம் எந்த அளவில் மக்களைச் சென்றடைகின்றது என்பதையும், அது சரியாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும் கிராம அலுவலர்கள் அவதானிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இருகட்டங்களாக யாழ். மாவட்டக் கிராம அலுவலர்களைச் சந்தித்த போது கேட்டுக்கொண்டுள்ளார்.

கிராம அலுவலர்கள் மக்களோடு நெருக்கமாகத் தொடர்புள்ளவர்கள் என்ற முறையில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைச் சந்தித்து, மக்கள் எதிர்நோக்குகின்ற குறைபாடுகளையும், கிராம அலுவலர்கள் கடமைகளை நடைமுறைப் படுத்தும்போது சந்திக்கும் இடர்களையும் பற்றிக் கலந்தாலோசிப்பது என்றும் இச்சந்திப்புகளின் போதுமுடிவு செய்யப்பட்டது.

கிராம அலுவலர்கள் வசதி கருதிக் குறைந்த வட்டிக் கடன் அடிப்படையில், சுங்கத் தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்கள் பெறுவதற்கும், வெளிக்களக் கடமைகளோடு சம்பந்தப்பட்ட ஏனைய உபகரணங்களைப் பெறுவதற்கும் அரசுடன் பேசி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்—

குடாநாட்டில் யுத்தத்தினால் மரங்கள் அழிந்துள்ளதால், மீள்நடுகை செய்வதற்கு தெற்கிலிருந்து நாற்றுகள் தரப்படுவதோடு, ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ரூபா 25,000 வீட்டுத் தோட்டங்களுக்குப் பழமரங்களை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் — இச்சந்திப்புகளின் போது டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

### சுரேஷ் மாணிக்க

(முதலாம் பக்கத் தொடர்)

சட்டவிரோத அமைப்புக்களுடன் தொடர்பு உடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1995 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு ரொறன்ரோவில் உள்ள டொன் சிறைச்சாலையில் இவர் வைக்கப்பட்டிருந்தார்.

இவரைக் கடந்த 13 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்த கனடா அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதனை எதிர்த்து வழக்கறிஞர் பாபரா ஜாக்மன் உயர் நீதிமன்றில் தடை உத்தரவு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தமையால் இவர் நாடு கடத்தப்படுவது நாளை 19 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த தடை உத்தரவு மனு நீதிமன்றால் பரிசீலனை செய்யப்பட்டு கடந்த 16ஆம் திகதி நிராகரிக்கப்பட்டதை அடுத்து இவர் நாளை இலங்கைக்கு நாடு கடத்தப்பட உள்ளார்.

அதே சமயம் சுரேஷ் மாணிக்கவாசகத்தைப் பார்வையிட டொன் சிறைச்சாலைக்குச் சென்ற கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் அவர் இருந்த நிலையைக் கண்டு அதிர்ச்சியுற்று மயக்கமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதிசுரேஷ் மாணிக்க வாசகத்தை அவரது சட்டத்தரணியும் சேவியர் என்ற இந்த தமிழ் கிறிஸ்தவப் பாதிரியாரும் பார்வையிடச் சென்றனர்.

சிறையில் அவர் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் ஆடைகள் எதுவுமின்றி நிர்வாணமாக வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையைப் பார்த்தே பாதிரியார் மயக்கமடைந்தார்.

தற்கொலை முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாமல் இருப்பதற்காகவே சுரேஷ் மாணிக்கவாசகம் இந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதாம். (இ-9)

### மாற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

இம் மாதம் 25ஆம் திகதி கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாற்று யோசனை ஒன்றைத் தயாரிப்பதற்காக மூத்த உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவை ஐ. தே. கட்சி உருவாக்கியிருந்தது தெரிந்ததே. (இ-5)

### களுத்துறை..

(முதலாம் பக்கத் தொடர்)

போதும்அவர்கள்தீவிரசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இவ்வாறான சோதனையை ஏற்றுக் கொள்பவர்களே சிறைச்சாலையினுள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

கைதிகளைக் கண்டு உறவினர்கள் கலந்துரையாடும்போது சிறைச்சாலை உயர் உத்தியோகத்தர் ஒருவரும், பொலிஸ் அதிகாரி ஒருவரும் அருகில் இருப்பர். உறவினர்கள் கைதிகளுடன் கலந்துரையாடும் விடயங்கள் குறித்துத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவர்கள் அருகில் இருப்பார்கள்.

இச் சட்டம் நடைமுறைக்கு வருவது குறித்து ஆட்சேபம் தெரிவித்து களுத்துறைச் சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"காரணம் எதுவுமின்றிக் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நாங்கள் எங்களது பெற்றோர்கள், உறவினர்களைச் சந்திக்கும் போதே கவலைகளை மறந்து சந்தோசமாக இருக்கின்றோம்.

"ஒரே இனம் ஒரே நாடு, ஒரே மதம் என இலங்கையர் அனைவரையும் ஒன்று படுத்தி எண்ணுகின்ற தாங்கள் இச்சட்டம் குறித்து மௌனமாக இருப்பது எமக்குக் கவலையைத் தருவதாக இருக்கின்றது.

"சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளைக் குறிப்பாகத் தமிழ்க் கைதிகள் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயற்படுகின்றனர்.

இச் சட்டம் குறித்துத் தாங்கள் உடன் நடவடிக்கை எடுக்காது விட்டால் நாளை 19 ஆம் திகதி முதல் எமது உறவினர்களுடனான சந்திப்பை நாம் பகிஷ்கரிக்கவுள்ளோம்.

தொடர்ந்தும் தாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கா விட்டால் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் சாத்வீகமான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவோம்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக மனித கௌரவத்திற்கான அமைப்பைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி வேலாயுதத்துக்கும் தமது முறைப்பாட்டை தமிழ்க் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நாளை 19 ஆம் திகதி முதல் இலங்கை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கும் சிறைச்சாலைச் சந்திப்புத் தொடர்பான அவசரகாலச் சட்டமானது ஓர் எதேச்சதிகாரமான போக்கைக் காட்டுகின்றது எனவும் —

இது தொடர்பாக அரசாங்கம் எந்த விதமான சாட்டுப் போக்கையும் கூற முடியாது எனவும் —

இதனைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் — திருமதி மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்துள்ளார். (இ-7-9)

எமது
புதிய வெளியீடு

சுரேஷ்கோபி, திலகன்
❋ மாயாண்டி IPS
வீடியோ CD
வெளியீடுகள்
❋ ரெட்டை ஜடை வயசு
❋ தடயம்

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2675)

எமது
புதிய வெளியீடு!

நெப்போலியன்,
தேவயானி
நடித்த
❋ கிழக்கும் மேற்கும்
புதிய படப் போஸ்டர்களும் உண்டு.

வீடியோ விமல்
(சி/2674)

நாமும் சுற்றாடலும்
ஆண்டு 2
புதிய பாடத்திட்டம்

பாடத்திட்டத்துக்கு அமைய ஒழுங்கு முறையில் உப அலகுகளுக்கு விரிவான விளக்கங்களையும் அதிக பயிற்சிகளையும் உள்ளடக்கியது.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
(52678)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org